PDMO

பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் | இலங்கை

நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2027-2031

மற்றும்

வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் 2027

பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

செயலகம் (3ஆம் மாடி)
கொழும்பு 00100
இலங்கை
info@pdmo.gov.lk

PDMO

பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் | இலங்கை

நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம்

மூலோபாய மற்றும் முன்மதிமிக்க படுகடன் முகாமைத்துவத்துக்கான வழிகாட்டல்

2027 -2031

பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

செயலகம் (3 ஆவது மாடி)
கொழும்பு 00100
இலங்கை
info@pdmo.gov.lk

உள்ளடக்கம்

1. நிறைவேற்றுப் பொழிப்பு 1

2. இலங்கையில் பொது படுகடன் முகாமைத்துவம் பற்றிய கண்ணோட்டம் 2

2.1 சட்டக் கட்டமைப்பு 2

2.2 நிறுவனக் கட்டமைப்பு 2

2.3 படுகடன் முகாமைத்துவ நோக்கங்கள் 2

3. நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் (MTDS) 3

3.1 MTDS இன் கீழ் படுகடன் பாதுகாப்பு 3

3.2 நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2025-2029 3

4. தற்போதைய அரச படுகடன் துறையின் கட்டமைப்பு 4

4.1 அரச படுகடனின் சேர்க்கை 4

4.2 மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசாங்க படுகடன் விகிதாசாரம் 5

4.3 தற்போதுள்ள அரசாங்க படுகடனின் மீளளிப்பு விவரக்குறிப்பு 6

4.4 தற்போதய படுகடனில் சேர்க்கப்பட்ட செலவு மற்றும் இடர் 7

4.4.1. அரசாங்க படுகடன் துறைக்கான வட்டிச் செலவு 8

4.4.2. மீள்நிதியிடல் இடர் 9

4.4.3. வட்டி விகித இடர் 9

4.4.4 நாணய இடர் 10

5. படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமும் அரசாங்க படுகடன் நிலைபெறுதன்மை மீதான அதன் தாக்கமும் 10

5.1 மறுசீரமைப்புச் செயன்முறையின் முக்கிய அடைவுகள் 10

5.1.1 உடனடி நிதி நிவாரணம் மற்றும் கடன் குறைப்பு 10

5.1.2 பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தலும் அரசிறை ஒழுக்கமும் 11

5.1.3 உள்நாட்டு படுகடன் நிவாரணமும் நிதியியல் முறைமை உறுதிப்பாடும் 11

5.1.4 மேம்பட்ட வெளிநாட்டு படுகடன் நிலைபெறு தன்மை, ஒதுக்கு நிலை 12

5.1.5 இலங்கையின் கடன் தரப்படுத்தல் பற்றிய இற்றைப்படுத்தல் 12

5.2. இலங்கையின் கடன் தரவரிசைகள் மேம்படுத்தப்பட்டன 13

5.2.1 கடன் மதிப்பீடு மேம்பாட்டிற்கான காரணிகள் 13

5.2.2 கடன் மதிப்பீடு மேம்படுத்தல்களின் தாக்கம் 13

6. அடிப்படைப் பேரண்டப் பொருளாதார ஊகங்கள் 14

6.1 சமீபத்திய பேரண்டப் பொருளாதார நிகழ்வுகள் மற்றும் கண்ணோட்டம் 15

7. 2027 – 2031 காலப் பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபயம் 16

7.1 2031 இறுதியில் படுகடன் முகாமைத்துவ இலக்குகள் 16

7.2 2027 – 2031 காலப் பகுதிக்கான நிதியிடல் மூலோபாயம்; 17

7.3 2027 – 2031 காலப் பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் நடைமுறைப்படுத்தல் திட்டம் 21

7.4 வரையறைகளும் சவால்களும் 22

8. முடிவுரை 23

நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2027 -2031

1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கை தனது படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களுடன் சீரமைக்க பாரியதொரு மாற்றத்தை மேற்கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொது படுகடன் முகாமைத்துவச் சட்டம் (PDMA) இயற்றப்பட்டதும், பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் (PDMO) நிறுவப்பட்டதும் இலங்கையில் படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிக்கு காரணமாக அமைந்ததன. சர்வதேச நாணய நிதியம் அதன் நீடித்த நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்ணயித்த கடன் நிலைத்தன்மை இலக்குகளை அடைவதற்கு வலுவான சட்டப் பின்னணி மற்றும் மையப்படுத்தப்பட்ட நிறுவன கட்டமைப்பைக் கொண்டிருப்பது அவசியமாகும். படுகடன் முகாமைத்துவத்தை மேம்படுத்தல் தொடர்பான சீர்திருத்தங்கள், பொது படுகடனை முகாமை செய்வதில் வெளிப்படைத்தன்மை, செயற்திறன் மற்றும் மூலோபாய ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் சர்வதேச சிறந்த நடைமுறை களை அறிமுகப்படுத்துகின்றன.

PDMA இன் கீழ், பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம், சுழற்சி முறையில் ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் (MTDS) ஒன்றினைத் தயாரிப்பதற்கு கடமைப்பட்டுள்ள அதேவேளையில், அது வருடாந்தம் இற்றைப்படுத்தப்படும். நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டமானது, பொதுப் படுகடனை நிலையான முறையில் முகாமைசெய்தல், செலவு மற்றும் அனர்த்தத்தை சமநிலைப்படுத்துதல், அரசாங்கத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அரசிறை நிலைத்தன்மையை ஆதரித்தல் ஆகியவற்றுக்கான கட்டமைக்கப்பட்ட செயற்திட்டத்தை வழங்குகிறது.

மேற்கூறிய தேவைப்பாடுகளுக்கு இணங்க நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் 2027–2031 விருத்தி செய்யப்பட்டது. அது கடன் நிலைத்தன்மையை வலுப்படுத்தல், அத்துடன் வட்டி வீத இடர்கள், மீள்நிதியிடல் இடர்கள் மற்றும் நாணய மாற்று இடர்கள் போன்ற பாதிப்புகளைக் குறைத்தல் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது. தற்போதைய கடன் துறையினைப் பற்றிய பகுப்பாய்வு, குறுகிய கால திறைசேரி உண்டியல்கள், அதிக செறிவிலிருந்து உருவாகும் மீள்நிதியளிப்பு அபாயத்தையும், மறுசீரமைப்புக்கான குறைந்த சராசரி நேரம் (ATR) காரணமாக மொத்தக் கடன் தொகுப்பில் வெளிநாட்டு நாணயத்திலான கடன்களின் பங்கு அதிகமாக இருப்பதால் ஏற்படும் அந்நியச் செலாவணி அபாயம் வட்டி விகித அபாயத்தையும் முக்கிய சவால்களாக அடையாளம் கண்டுள்ளது. அரசாங்க வருமானத்தின் பங்கொன்றாக வட்டி செலுத்துதல்களும் முக்கியமான செலவு குறிகாட்டியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் 2027 - 2031 ஆனது, மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் மூலம் அரசாங்க படுகடன் துறையின் செலவு மற்றும் அபாயம் இரண்டையும் விவேகத்துடன் முகாமைசெய்வதற்கு முதன்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில், நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் 2027-2031 அதன் மொத்த படுகடன் தேவைகளில் 88 சதவீதத்தை உள்ளூர் நாணயத்தில் உள்நாட்டுக் கடன் மூலம் நிதியளிக்க வடிவமைத்ததுடன், மீதி 12 சதவீதம் வெளிநாட்டு நாணயக் கடனிலிருந்து பெறப்படுகிறது. அதன் பின்னர், வெளிநாட்டு நிதியிடலில் விவேகமான மீதியொன்றைப் பேணுவதன் மூலம் கடன் பெறுகை ரூபாவினால் ஆதிக்கமிக்க பங்கு

85 சதவீதத்தினால் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மூலோபாயமானது, குறுகிய காலக் கடன்களின் மீதான சார்பைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்படி, 2031 ஆண்டிற்குள் மொத்தக் கடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கினை 6.6 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதமாகக் குறைக்கவும், கடன்களின் சராசரி முதிர்வு காலத்தை 6.6 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக நீடிக்கவும், அந்நியச் செலாவணி (FX) கடன்களின் பங்கினை 41 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கவும், மேலும் இந்த மூலோபாயம் அமலில் இருக்கும் காலத்தில் வருமானத்துக்கும் வட்டிச் செலுத்துதல் விகிதத்தை 44.6 சதவீதத்திலிருந்து 34 சதவீதமாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, MTDS 2027–2031 ஆனது, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலங்கையின் அரசாங்க படுகடனை முகாமை செய்வதற்கான தெளிவான கட்டமைப்பை நிறுவுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடலை விவேகத்துடன் ஒருங்கிணைத்தல், கடன் முதிர்வுக் காலங்களை நீடித்தல், மற்றும் மீள்நிதியிடல், வட்டி விகித இடர்களைக் குறைத்தல் மற்றும் வெளிநாட்டுச் செஆகியவற்றின் மூலம், இந்த மூலோபாயத் திட்டமானது கடன் நிலைத்தன்மையை வலுப்படுத்தவும், கடன் வாங்கும் செலவுகளைக் குறைக்கவும், உரிய நேரத்தில் கடன் சேவையை உறுதி செய்யவும் முயற்சிக்கிறது. வருமான அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு, உள்நாட்டு படுகடன் சந்தையின் அபிவிருத்தி, பொறுப்பு முகாமைத்துவச் செயற்பாடுகளைச் செயற்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு, இலங்கையின் நீண்டகால படுகடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒட்டுமொத்தமாக பங்களிப்புச்செய்யும்.

2. இலங்கையில் பொது படுகடன் முகாமைத்துவம் பற்றிய கண்ணோட்டம்

2.1 சட்டக் கட்டமைப்பு

2024 ஜூன் 18 அன்று சட்டமாக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொது படுகடன் முகாமைத்துவச் சட்டமானது (PDMA), சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப ஒருங்கிணைக்கப்பட்ட சட்டமொன்றாகும். இச்சட்டம் பொது படுகடன் முகாமைத்துவத்தில் நவீன நுட்பங்களை வழங்குவதுடன், இதற்கு முன்னர் பல்வேறு சட்டங்களில் கிடைத்த துண்டு துண்டான சட்ட விதிகளுக்குப் பதிலாக இலங்கையின் பொது படுகடனை நிர்வகிப்பதற்கான மிகவும் நெறிப்படுத்தப்பட்ட, பயனுள்ள மற்றும் எதிர்கால நோக்குடைய கட்டமைப்பை வழங்குகிறது.

2.2 நிறுவனக் கட்டமைப்பு

இலங்கையின் பொது படுகடன் முகாமைத்துதவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், PDMA இன் கீழ், 2024 டிசம்பர் 2 அன்று பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் (PDMO) நிறுவப்பட்டது. அவ்வாறு நிறுவப்பட்டதிலிருந்து, படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நிறுவன திறனை வளர்ப்பதிலும், சட்டத்துடன் இணைக்கப்பட்ட ஒழுங்குமுறை அடித்தளங்களை நிறுவுவதிலும், நவீன படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளை உருவாக்குவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. முன்னர் பல நிறுவனங்களில் பரவியிருந்த பொது படுகடன் முகாமையுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் குறித்த அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

2.3 படுகடன் முகாமைத்துவ நோக்கங்கள்

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு

3 இன் கீழ் பொது படுகடன் முகாமைத்துவ நோக்கங்கள் பின்வருமாறு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன;

அ. நிதித் தேவைகளையும் கடன் திருப்பிச் செலுத்தும் கடமைகளையும் சரியான நேரத்தில் பூர்த்தி செய்தல்;

ஆ. நடுத்தர முதல் நீண்ட காலத்திற்கு முடிந்தவரை குறைந்த, விவேகமான அளவிலான ஆபத்துக்கு ஏற்ப செலவில் கடன் பெறுதல், மற்றும்

இ. உள்நாட்டு படுகடன் பிணைய சந்தையின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

3. நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம்

பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 11 இன் படி, படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தை (MTDS) உருவாக்கி, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும். MTDS ஆனது அரசாங்கத்தின் நடுத்தர கால நிதி கட்டமைப்புடன் (MTFF) ஒத்துப்போகும் மற்றும் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதி சந்தை நிலைமைகள், தற்போதைய பொது படுகடன் துறையில் பொதிந்துள்ள செலவு மற்றும் அனர்த்தங்கள், பல்வேறு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி கிடைப்பது மற்றும் எதிர்கால கடன் தேவைகள் மற்றும் படுகடன் மீள்கொடுப்பனவுச் செலவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளும்.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், மூலோபாயம் தயாரிக்கப்பட்ட ஆண்டிற்குறிய ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்புக்குப் பிறகு மூலோபாயத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். படுகடன் நிலைகள் நிலையானதாகவும் உறுதியாகவும் இருப்பதை உறுதிசெய்து, மிகவும் செலவு குறைந்த கடன் பெறுகையினை அடைவதற்கான அவசியத்தை வலியுறுத்தும் வகையில், அரசாங்கத்தின் நிதித் தேவைகளை நிர்வகிப்பதற்கான மூலோபாய வரைபட மொன்றினை நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் வழங்குகிறது.

3.1 MTDS இன் கீழ் படுகடன் பாதுகாப்பு

பொது படுகடன் முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கேற்ப, பொது படுகடன் பின்வருவனவற்றை உள்ளடக்கும்;

- அரசாங்க படுகடன்
- அரசுடமை தொழில்முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரசித்தமான உத்தரவாதங்கள் உத்தரவாதமற்ற படுகடன்.

MTDS ஆனது அரசாங்கத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடனை மட்டுமே உள்ளடக்கியது.

3.2 நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2026-2030

2026–2030 இற்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் (MTDS) என்பது பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது மூலோபாயமாகும். இது உள்நாட்டுச் சந்தையில் கடன் பெறுவதற்கு முன்னுரிமை அளித்தவாறு, 2026-2028 இன் போது தேவைப்படும் மொத்த படுகடன் தொகையில் சுமார் 88 சதவீதத்தை உள்நாட்டு நிதி மூலங்களின் மூலம் திரட்டத் திட்டமிடப்பட்டது. மேலும், முதிர்ச்சியடையும் சர்வதேச இறையாண்மை முறிகளை (ISBs) மீளச் செலுத்துவதற்கு ஏதுவாக, 2029 ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்நியச் செலாவணியிலான (FX) நிதியாதாரங்களை அதிகரிப்பதையும் இந்த உத்தி உள்ளடக்கியிருந்தது.

MTDS 2026 2030 ஆனது, திறைசேரி உண்டியல்களின் பங்கைக் படிப்படியாகக் குறைத்தல், உள்நாட்டுக் கடன் தொகுப்பின்

முதிர்வு காலத்தை நீடித்தல், நிலையான வட்டி விகிதக் கடன்களின் பங்கினை அதிகரித்தல் மற்றும் ஓராண்டுக்குள் வட்டி விகிதங்கள் மாற்றத்திற்கு உள்ளாகும் கடன்களின் அளவைக் குறைத்தல் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இதன் மூலம், கடன் மீள்நிதியளிப்பு மற்றும் வட்டி விகித மாற்றங்களால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்க வழிவகை செய்யப்படுகிறது.

இந்த உபாயத்தினைச் செயற்படுத்தியதன் விளைவாக, கடன் செலவு மற்றும் இடர் தொடர்பான பல்வேறு குறியீடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. திறைசேரி உண்டியல்களின் பங்கு 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 10.1 சதவீதமாக இருந்த நிலையில், 2026 இறுதியில் 6.6 சதவீதமாகக் குறைந்தது. அதேபோல், ஓராண்டுக்குள் வட்டி விகிதங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டிய கடன்களின் அளவு 26.8 சதவீதத்திலிருந்து 24.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஓராண்டுக்குள் முதிர்ச்சியடையும் கடன்களின் அளவு, மொ. உ. உற்பத்தியில் 17.0 சதவீதத்திலிருந்து 12.4 சதவீதமாகக் குறைந்தது. மேலும், வருமானத்துக்கும் வட்டிச் செலுத்துதல்களுக்கும் இடையிலான விகிதம் 52.2 சதவீதத்திலிருந்து 44.6 சதவீதமாக மேம்பட்டுள்ளது. 3 முதல் 15 ஆண்டுகள் வரையிலான முதிர்வு காலம் கொண்ட திறைசேரி முறிகள் வெளியிடப்பட்டன. 2026 செப்டம்பர் 30 வரையிலான காலகட்டத்தில், இவற்றின் சராசரி முதிர்வு காலம் சுமார் 7.1 ஆண்டுகளாக இருந்தது. இது, உள்நாட்டுக் கடன் தொகுப்பின் சராசரி முதிர்வு காலத்தை (ATM) 4.6 ஆண்டுகளிலிருந்து 4.7 ஆண்டுகளாகச் சற்று அதிகரிக்கச் செய்தது. புதிதாக வெளியிடப்பட்ட திறைசேரி முறிகள் அனைத்தும் நிலையான வட்டி விகிதம் கொண்டவையாக இருந்துடன், உள்நாட்டுக் கடன் தொகுப்பில் இருந்த வட்டி விகித இடர் குறைவதற்கு வழிவகுத்தது.

இருப்பினும், அந்நியச் செலாவணி கடன் பங்கின் அதிகரிப்பு, நிலையான வட்டி விகிதக் கடன் பங்கின் குறைவு, அந்நியச் செலாவணி கடன் போர்ட்போலியோவின் சராசரி முதிர்வு காலம் குறைதல் மற்றும் ஒட்டுமொத்த கடன் போர்ட்போலியோவின் சராசரி முதிர்வு காலத்தில் ஏற்பட்டுள்ள சிறிய சரிவு ஆகியவை, முக்கியமான பாதிப்புத்தன்மைகள் இன்னும் நீடிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

வெளிநாட்டுக் கடனைப் பொறுத்தவரை, 2026 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய கடன் உறுதிப்பாடுகளில் 78.2 சதவீதம் மிதக்கும் வட்டி விகிதத்தைக் கொண்டிருந்த்துடன், புதிய கடன்களுக்கான சராசரி முதிர்வு காலம் 21.3 ஆண்டுகளாக இருந்தது. இருப்பினும், வெளிநாட்டுக் கடன் தொகுப்பின் சராசரி முதிர்வு காலம் 9.7 ஆண்டுகளிலிருந்து 8.9 ஆண்டுகளாகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக, ஒட்டுமொத்தக் கடன் கையிருப்பின் சராசரி முதிர்வு காலமும் 2025 இன் இறுதியில் இருந்த 6.8 ஆண்டுகளிலிருந்து 6.6 ஆண்டுகளாகக் குறைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, 2026 இறுதிக் குறிகாட்டிகள், குறுகிய கால மீள்நிதியளிப்பு இடர்களைக் குறைப்பதிலும், கடன் செலுத்தும் திறனை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இருப்பினும், மொத்த படுகடன் தொகுப்பின் முதிர்வுக் காலத்தை நீட்டிக்கவும், அந்நியச் செலாவணி வெளிப்பாட்டைக் குறைக்கவும் நடுத்தர கால செலவு மற்றும் இடர் இலக்குகளை அடையவும் மேலதிக முயற்சிகள் தேவைப்படுகின்றன.

4. தற்போதைய அரச படுகடன் துறையின் கட்டமைப்பு

4.1 அரச படுகடனின் சேர்க்கை

2026 ஜூன் இறுதியில், இலங்கையின் மொத்த அரசாங்க படுகடன் இருப்பு ரூ. 31,999 பில்லியனாக இருந்ததுடன், அதில் உள்நாட்டு படுகடன் மற்றும் வெளிநாட்டுக படுகடன் ஆகிய இரண்டும் அடங்கும். மொத்தக் கடனில் உள்நாட்டுக் கடனே பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. இது சுமார் 60 சதவீதமாகவும், 2025 ஜூன்

இறுதியில் 64 சதவீதமாக இருந்தது. வெளிநாட்டுக் கடனின் பங்கு 2026 ஜூன் இறுதியில் 40 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன் 2025 ஜூன் இறுதியில் இது 36 சதவீதமாக இருந்தது. இதற்கு முக்கிய காரணம், குறித்த காலப்பகுதியில் உள்நாட்டு படுகடன் இருப்பு ரூ. 452 பில்லியனாக குறைந்ததாகும். பணப் பாய்ச்சல்களைப் பயன்படுத்தி திறைசேரி உண்டியல்கள் மீளச் செலுத்தப்பட்டதும், வெளிநாட்டு படுகடன் இருப்பைப் பொறுத்தவரை நாணய மாற்று விகித மாற்றங்களின் தாக்கமுமே இதற்குக் காரணமாகும்.


அட்டவணை 01: தற்போதைய அரசாங்க படுகடன் இருப்பு கட்டமைப்பு (ரூ. பில்.)

	2025 யூன் இறுதியில்	2026 யூன் இறுதியில்
உள்நாட்டுப் படுகடன்	**19,655**	**19,203**
திறைசேரி உண்டியல்கள்	3,921	2,372
திறைசேரி முறிகள்	15,039	16,069
ஏனைய	695	762*
வெளிநாட்டுப் படுகடன்	**11,140**	**12,796**
பல்தரப்பு	4,035	4,983
இருதரப்பு	3,300	3,635
சந்தை பெறுகைகள்	3,805	4,178
மொத்தம்	**30,795**	**31,999**

* ரூ. 17 பில்லியன் மதிப்பிலான உள்நாட்டு டொலர் முறிகள் உள்ளடங்களாக

2026 ஜூன் மாத இறுதியில், படுகடன்களின் அடிப் படையில் அரசாங்க கடன் இருப்பின் கட்டமைப்பு வரைபு 01 இல் காட்டப்பட்டுள்ளது


வரைபு 01: 2026 ஜூன் இறுதியில் சாதனங்கள் அடிப்படையில் அரச படுகடன் இருப்பு நிலுவை



மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

4.2 மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசாங்க படுகடன் விகிதாசாரம்

வரைபு 02: மொ.உ.உ. உற்பத்தியில் சதவீதமாக அரசாங்க படுகடன் இருப்பு



மூலம்: தொகை மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம் மற்றும் பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் e-மதிப்பீடு

கடந்த ஏழு தசாப்தங்களாக, இலங்கையின் மொத்த அரசாங்க படுகடன் அளவு பெருமளவில் அதிகரித்துள்ளது. இதில்,

மொ.உ. உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் கடனின் விகிதமானது 1950 இல் 17 சதவீதத்திலிருந்து 2022 இல் 114.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

1977 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பொருளாதார தாராள மயமாக்கலுக்குப் பிறகு, வெளிநாட்டுக் கடன்களைச் சார்ந்திருக்கும் அரசின் போக்கு விரைவாக அதிகரித்தது. இதனால், 1950 முதல் 1976 வரையிலான காலப்பகுதியில் சராசரியாக சுமார் 10 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன் மொ.உ. உற்பத்தி, 30 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்தது. 1990 இல், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மொ.உ. உற்பத்தி சுமார் 50 சதவீதத்தை எட்டியிருந்தது.

2000 களின் தொடக்கத்திலிருந்து, மொத்தக் கடன் அளவில் உள்நாட்டுக் கடனின் பங்கு படிப்படியாக அதிகரித்தது. 2010 முதல் 2018 வரையிலான கால கட்டத்தில் ஒட்டுமொத்தக் கடன் அளவு கணிசமாக விரிவடைந்ததுடன், விளைவாக, 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் கடன் மொ.உ. உற்பத்தி விகிதம் வரலாற்றிலேயே மிக உயர்ந்த அளவை எட்டியது.


சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கடன் மறுசீரமைப்பின் நீடித்த தாக்கம், வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் விவேகமான கடன் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியவற்றின் விளைவாக, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் கடன் – மொ.உ. உற்பத்தி விகிதம் 94.9 சதவீதமாகக் (மொத்த அடிப்படையில்) குறைந்துள்ளதுடன், 2026 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த விகிதம் 89 சதவீதமாகக் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4.3 தற்போதுள்ள அரசாங்க படுகடனின் மீளளிப்பு விவரக்குறிப்பு

தற்போதைய அரசாங்க படுகடன் மீட்பு விவரக்குறிப்பு, அதன் முதிர்வுக் கட்டமைப்பின் விவரங்களை அளிக்கிறது. இது பொதுவாக, குறிப்பிட்ட காலப்பகுதியில் கடனில் எவ்வளவு, எப்போது திருப்பிச் செலுத்தப்படும் அல்லது மீட்கப்படும் என்பதைக் காட்டுகிறது.

2027 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையிலுள்ள திறைசேரி முறிகள் ரூ. 2,300 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வரைபு 03 இல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, குறுகிய கால மீள்நிதியளிப்பு இடரினை எடுத்துக்காட்டும் வகையில், 2027 இல் அவை மீட்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன. திறமையான வருமான மற்றும் பணப்புழக்க முகாமைத்துவம் மூலம் இதனைக் குறைக்க முடியும். 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் திறைசேரி முறிகளின் கையிருப்பு முறையே ரூ. 4,092 பில்லியன், ரூ. 4,070 பில்லியன் மற்றும் ரூ. 3,138 பில்லியனாக இருந்தது. மேலும், அரசாங்கம் அந்தத் தொகைகளை வெற்றிகரமாக மீள்நிதியளிப்பு செய்துள்ளது அல்லது மீட்டுள்ளது.

வரைபு 03 – 2026 இறுதியில் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட, தற்போதுள்ள அரசாங்கக் கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணை – ரூபா பில்லியன்



மூலம்: பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

வெளிநாட்டுக் கடனில், இலங்கைக்குள் அந்நியச் செலாவணியில் பெறப்பட்ட கடன்களும் அடங்கும்.

உள்நாட்டுக் கடன் என்பது இலங்கை ரூபாவில் பெறப்பட்ட கடனைக் குறிக்கிறது. e- மதிப்பிடப்பட்டது

இதற்கிடையில், உள்நாட்டுக் கடன் திருப்பிச் செலுத்தல் கட்டமைப்பில் திறைசேரி முறிகளே பெரும்பங்கு வகிக்கின்றன. இதில் 2028 இல் முதிர்ச்சியடையும் முறிகளின் அளவு ரூ. 2,155 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடிக்கு

மத்தியில், அரசாங்கம் குறுகிய மற்றும் நடுத்தர கால முதிர்வு கொண்ட முறிகளை அதிகளவில் வெளியிட்டது. இதன் விளைவாக, 2027 முதல் 2035 வரையிலான கால கட்டத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய முறிகளின் செறிவு அதிகமாக உள்ளது.

இருப்பினும், நிதிச் செயற்பாடு, சந்தை நிலைத்தன்மை மற்றும் பாரிய பொருளாதாரக் குறியீடுகளில் ஏற்பட்டுள்ள தற்போதைய முன்னேற்றங்களால், முதலீட்டாளர்களின் ஆர்வம் படிப்படியாக நடுத்தர மற்றும் நீண்ட கால முதிர்வு கொண்ட முறிகளை நோக்கித் திரும்பத் தொடங்கியுள்ளது.

வெளிநாட்டுக் கடன்கள், உத்தியோகபூர்வ கடன் வழங்குவோர் குழுவுடன் (OCC) மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு, எதிர்காலத் திருப்பிச் செலுத்துதல்களைச் சீராகப் பரவச் செய்துள்ளது. இது குறுகிய காலத்தில் வெளிநாட்டுக் கடன் மீட்புகளின் செறிவைக் குறைக்கிறது. முறி பரிவர்த்தனையின் கீழ் வெளியிடப்பட்ட புதிய சர்வதேச இறையாண்மை முறிகள், மாறுபட்ட தூண்டுதல்கள் மற்றும் கூப்பன் விகிதங்களுடன் கூடிய கடன் திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பைப் பின்பற்றுகின்றன. இது ஒரு பன்முகப்படுத்தப்பட்ட கடன் தொகுப்பிற்குப் பங்களிக்கிறது. வரைபு 03 இல் காட்டப்பட்டவாறு, மறுசீரமைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடனுக்கான மூலதனத் திருப்பிச் செலுத்துதல் தொடங்குவதால், அந்நியச் செலாவணிக் (FX) கடன் திருப்பிச் செலுத்துதல்கள் 2028 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக உயர்ந்து 2038 இல் உச்சத்தை அடையும் என்றும், அதன் பிறகு 2046 வரை படிப்படியாகக் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

4.4 தற்போதய படுகடனில் சேர்க்கப்பட்ட செலவு மற்றும் இடர்

தற்போதைய அரசாங் படுகடன் தொகுப்புடன் தொடர்புடைய செலவு மற்றும் இடர் ஆகியவை, முக்கிய இடர் மற்றும் செலவு குறிகாட்டிகளின் வாயிலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 02: தற்போதய கடனிலுள்ள செலவு மற்றும் இடர் - 2026 இறுதியில் எதிர்வுகூறப்பட்டது

இடர் குறிகாட்டிகள்		வெளிநாட்டு படுகடன்	உள்நாட்டு படுகடன்	மொத்த படுகடன்
தொகை (இலங்கை ரூபா பில்லியன்)		13,139.7	18,891.2	32,030.9
தொகை (அமெரிக்க டொலர் பில்லியன்)		38.1	62.1	100.2
மொ.உ. உற்பத்தியில் பெயரளவு படுகடன் சதவீதமாக		36.5	52.5	89.0
மொ.உ.உ சதவீதமாக தற்போதய பெறுமதி [1]		34.7	52.5	87.1
படுகடன் செலவு [2]	மொ.உ.உ சதவீதமாக தற்போதய பெறுமதி [3]	1.4	6.0	7.4
	வருமான சதவீதமாக வட்டி செலுத்துதல்	8.4	36.2	44.6
	எடையிடப்பட்ட சராசரி ஐஆர் (சதவீதம்)	3.8	11.3	8.2
மறுநிதியளிப்பு இடர் [2]	மீள் சரிசெய்தல் சராசரி காலம் (வருடங்கள்)	8.9	4.7	6.6
	1 வருடத்தில் படுகடன் முதிர்வு (மொத்த சதவீதம்)	3.6	20.5	12.8
	1 வருடத்தில் படுகடன் முதிர்வு (மொ.உ.உ. சதவீதம்)	1.6	10.8	12.4
வட்டி விகித இடர்[2]	மீள் சரிசெய்தல் சராசரி காலம் (வருடங்கள்)	7.2	4.5	5.7
	1 வருடத்தில் படுகடன் சரிசெய்தல் (மொத்த சதவீதம்)	24.6	23.6	24.1
	தி. முறி நிலையான விகித படுகடன் (மொத்த சதவீதம்)	78.0	96.5	88.1
	தி. உண்டியல்கள் (மொத்த சதவீதம்)	0.0	12.2	6.6
FX இடர்	FX படுகடன் (மொத்த படுகடன் சதவீதம்)			41.0
	ST FX படுகடன் (ஒதுக்கு சதவீதம்)			19.7

மூலம்: பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

[1] மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போதைய பெறுமதி சதவீதமாக கணக்கிடப்படுகிறது, இது திட்டமிடப்பட்ட கடன் சேவை கொடுப்பனவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது, அங்கு சலுகை அல்லது அரை சலுகை விதிமுறைகளில் அந்த சாதனங்களுக்கு 5% தள்ளுபடி விகிதம் பயன்படுத்தப்படுகிறது.

[2] எடையிடப்பட்ட சராசரி வட்டி விகிதம், மீள்நிதியளிப்பு மற்றும் வட்டி விகித இடர்கள் போன்ற திட்டமிடப்பட்ட பணப்புழக்கங்களைப் பயன்படுத்தும் செலவு - இடர் குறிகாட்டிகள் திட்டமிடப்பட்ட மாற்று விகித அனுமானங்களைப் பயன்படுத்துகின்றன.


[3] வருமான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வட்டிச் செலுத்துதலின் சதவீதமானது, 2026 நிலுவையிலுள்ள

கடனுக்கான வட்டிச் செலுத்துதலை 2026 வருமான / மொ. உ. உற்பத்தியால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

கடன் தொகுப்பின் செலவானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவும் வருவாயின் சதவீதமாகவும் செலுத்தப்படும் வட்டியைக் கொண்டு அளவிடப்படுகிறது. அதே சமயம், கடன் தொகுப்பில் உள்ள இடர்கள், கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ள மறுநிதியளிப்பு இடர், வட்டி விகித இடர் மற்றும் மாற்று விகித இடர் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

4.4.1. அரசாங்க படுகடன் துறைக்கான வட்டிச் செலவு

வணிக ரீதியிலான வட்டி விகிதங்கள் உள்ளிட்ட அதிகப்படியான கடன் வாங்கியதன் விளைவாக, பெயரளவு வட்டிச் செலுத்துதல்கள் 2020 இல் சுமார் ரூ. 980 பில்லியனிலிருந்து, 2026 இல் ரூ. 2,617 பில்லியனாக (மதிப்பீடு) கணிசமாக அதிகரித்துள்ளன. 2025 இறுதியில், வட்டிச் செலுத்துதல் ரூ. 2,501 பில்லியனாகப் பதிவாகியுள்ளது. இது 2024 இறுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கக் குறைவு ஆகும். உள்நாட்டுச் சந்தையில் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். இருப்பினும், 2026 ஆண்டிற்கான மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், கடன் சேவைச் செலவுகள் அதிகரித்து வருகின்றன. 2026 ஆண்டிற்கான வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிச் செலுத்துதல்களில் ஐ.அ.டொ. 1,041 மில்லியன் (சுமார் ரூ. 343 பில்லியன்) அடங்கும். இதில் ஐ.அ.டொ. 670 மில்லியன் (சுமார் ரூ. 200 பில்லியன்) 2026.08.31 வரையிலான காலப்பகுதிக்குள் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டன.



மூலம்: பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்

2020 - 2023 வரையிலான காலப்பகுதியில், வட்டிச் செலுத்துகை க்கும் வருமானத்துக்குமான விகிதம் சுமார் 70–81 சதவீதமாக இருந்தது. இது அரசாங்கத்தின் வருவாயில் பெரும் பகுதி வட்டிச் செலுத்துகைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டதைக் காட்டுகிறது. 2023 இற்குப்பின், வருமான வளர்ச்சி அதிகரித்ததாலும், கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் மூலம் வட்டிச் செலுத்துகைகள் குறைக்கப்பட்டதாலும், நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு, இந்த விகிதம் சரிவுப் பாதையைக் காட்டியது. இதன்படி, 2026 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த விகிதம் சுமார் 44.6 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2025 ஆண்டின் தொடக்கத்தில், வட்டிச் செலுத்து கைக்கும் வருமானத்துக்குமான விகிதம் 52.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், இது அரசாங்க வருமானத்தில் பாதியிற்கும் மேலாக இருந்ததால், இந்த விகிதத்தை வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதற்கான மூலோபாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கடன் வாங்குவதற்கான செலவைக் குறைத்தல் ஆகிய நடவடிக்கைகளின் கூட்டு விளைவாக, 2025 இறுதியில் இந்த விகிதம் வெற்றிகரமாக 45.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிச் சீர்திருத்தங்களின் நேர்மறையான தாக்கங்களால், இந்தச் சுமை படிப்படியாகக் குறைந்து வருவதுடன், வட்டிச் செலுத்துகைக்கும் வருவாய்க்குமான விகிதத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது.

4.4.2. மீள்நிதியிடல் இடர்

மொத்தக் கடன் தொகுப்பில், மீள்நிதியிடல் இடர் உள்நாட்டுக் கடன் தொகுப்பில் பெருமளவில் குவிந்துள்ளது. இதில் 2026 ஜூன் இறுதியில் 7.4 சதவீத திறைசேரி உண்டியல்களும் மற்றும் 50.2 சதவீத திறைசேரி முறிகளும் அடங்கியுள்ளன. உள்நாட்டுக் கடன் பிரிவில், முதிர்வுக்கான சராசரி காலம் குறைவாக இருப்பதும், ஓராண்டுக்குள் முதிர்ச்சியடையும் கடன்களின் விகிதம் அதிகமாக இருப்பதும், பணப்புழக்கம் மற்றும் கடன் புதுப்பித்தல் தொடர்பான தெளிவான இடர்களை ஏற்படுத்துகின்றன. நெருக்கடிக்குப் பிந்தைய காலத்தில், உள்நாட்டுக் கடன்களின் முதிர்வு காலத்தை நீட்டிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில், திறைசேரி உண்டியல்கள் வாயிலாக ரூபா 700 பில்லியன் நிகரக் கடன் பெறுதல் எதிர்மறையாக உள்ளதுடன்; இது ஒட்டுமொத்த கடன் தொகுப்பின் மீள்நிதியளிப்பு அபாயத்தை கணிசமாகக் குறைக்கிறது. சந்தையின் விருப்பம் நடுத்தர மற்றும் நீண்ட கால அரசாங்க முறிகளை நோக்கி மாறியுள்ளதுடன், இது சந்தை நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இருப்பினும், 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து மத்திய கிழக்கு நெருக்கடியால் ஏற்பட்ட வெளிப்புற அதிர்ச்சிகளின் காரணமாக, 10 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட கால முதிர்வு கொண்ட முறிகளுக்குச் சாதகமற்ற சூழல் நிலவுகிறது.

இதற்கு மாறாக, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் மூலம் அடையப்பட்ட முதிர்வுக் கால நீட்டிப்புகளின் காரணமாக, நீண்ட முதிர்வுக் காலங்கள் மற்றும் குறைந்த குறுகிய காலக் கடமைகளுடன், வெளிநாட்டுக் கடன் தொகுப்பு விவேகத்துடன் நிர்வகிக்கப்படுவதாகத் தெரிகிறது.உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு மற்றும் சீனா எக்ஸிம் வங்கி மறுசீரமைப்பு உள்ளிட்ட உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு, இலங்கையின் பொருளாதாரம் மீளும் வரை செலுத்த வேண்டிய தொகையை ஒத்திவைப்பதன் மூலம் அதன் குறுகிய காலக் கடன் சுமையைக் குறைக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டக் காலத்தில், செலுத்த வேண்டிய அத்தகைய கடன் சேவைகளில் இலங்கை கணிசமான கடன் நிவாரணத்தைப் பெறுகிறது. இலங்கை 2028 வரை மூலதனச் சலுகைக் காலங்கள், குறைக்கப்பட்ட வட்டி விகிதங்கள் மற்றும் 2043 இல் இறுதித் திருப்பிச் செலுத்துதலுடன் கூடிய படிப்படியான கடன்தீர்வு முறையைப் பெற்றது. சர்வதேச இறையாண்மை முறிகளின் மறுசீரமைப்பிலிருந்து, இலங்கை சராசரி முதிர்வுக் காலத்தை சுமார் 6 ஆண்டுகள் வரை நீட்டித்துள்ளது.

4.4.3. வட்டி விகித இடர்

வெளிநாட்டுக் கடன் தொகுப்புடன் ஒப்பிடுகையில், உள்நாட்டுக் கடன் தொகுப்பு அதிக வட்டி விகித இடரினைக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம், அதன் குறுகிய சராசரி மீள்நிர்ணயக் காலம் மற்றும் ஓராண்டுக்குள் மறுநிர்ணயம்

தேவைப்படும் கடனின் அதிகப் பங்கு ஆகும். ஓராண்டுக்குள் முதிர்வடையும் அதிக அளவிலான திறைசேரி முறிகளே இதற்கு முக்கியக் காரணமாகும். 2026 ஜூன் இறுதியில் உள்ளவாறு, மொத்தக் கடன் தொகுப்பில் திறைசேரி முறிகள் சுமார் 7.4 சதவீதமாக உள்ளன. இது 2025 இறுதியில் இருந்த 10.1 சதவீதத்திலிருந்து குறைந்துள்ளது.


இருப்பினும், இவை மீள்நிதியளிப்பு மற்றும் வட்டி விகித இடர்கள் ஆகிய இரண்டிற்கும் பங்களிக்கின்றன. இருப்பினும், உள்நாட்டுக் கடன் தொகுப்பில் உள்ள கணிசமான நிலையான வட்டி விகிதக் கருவிகளால் இந்த அபாயம் ஓரளவு தணிக்கப்படுகிறது. இது, குறுகிய கால முதிர்வு அமைப்பு இருந்தபோதிலும், வட்டிச் செலவு நிலைத்தன்மையை ஆதரிக்கிறது. இதற்கு மாறாக, வெளிநாட்டுக் கடன் தொகுப்பில் 22 சதவீதம் என்ற அளவில் சற்று அதிக மிதக்கும் வட்டி விகிதக் கருவிகள் இருந்தாலும், அது கணிசமாக நீண்ட சராசரி மீள்நிர்ணயக் காலத்தால் (ATR) பயனடைகிறது. இது, மீள்நிதியளிப்பு அல்லது மீள்விலையிடல் தேவைகளின் எண்ணிக்கையைக் குறைக்கிறது.

வரும் காலங்களில், வருடாந்திர வட்டி விகிதத்தை (ATR) நீட்டிப்பதில் ஒரு மூலோபாய கவனத்தைப் பேணுவதும், நிலையான வட்டி விகிதக் கடன்களுக்கு முன்னுரிமை அளிப்பதும், அத்துடன் வட்டி விகிதப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும், சாத்தியமான வட்டி விகித அதிர்ச்சிகளுக்கு எதிரான மீள்திறனை வலுப்படுத்துவதற்கு முக்கியமானதாக இருக்கும்.

4.4.4 நாணய இடர்

அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளவாறு, வெளிநாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்ட கடனின் கணிசமான பங்கைக் (மொத்தக் கடனில் 41.0 சதவீதம்) கருத்தில் கொள்ளும்போது, கட்டமைப்பு அந்நியச் செலாவணி அபாயம் அதிகமாக உள்ளது. வெளிநாட்டுக் கடன் தொகுப்பின் குறிப்பிடத்தக்க பகுதி அமெரிக்க டாலர்களில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், ஜப்பானிய யென், சீன யுவான் மற்றும் சிறப்பு வரைதல் உரிமைகள் (SDRs) ஆகியவற்றில் சிறிய அளவிலான வெளிப்பாடு உள்ளது. இந்த இடரினைக் கட்டுப்படுத்த, விவேகமான மாற்று விகித முகாமைத்துவம் மற்றும் சாத்தியமான இடங்களில் இடர் தவிர்ப்பு உத்திகள் முக்கியமானவை. கடனின் நாணய அமைப்பை நிர்வகித்தல், கையிருப்பை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டுக் கடன் சந்தையின் ஆழத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தொடர்ச்சியான முயற்சிகள், அந்நியச் செலாவணி தொடர்பான பாதிப்புகளை மேலும் குறைக்கும்.

வரைபு 05: 2026 ஜூன் இறுதியில் நாணய வாரியாக வெளிநாட்டுக் கடனின் கட்டமைப்பு



மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

5. படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமும் அரசாங்க படுகடன் நிலைபெறுதன்மை மீதான அதன் தாக்கமும்

5.1 மறுசீரமைப்புச் செயன்முறையின் முக்கிய அடைவுகள்

2022 ஆண்டு ஏற்பட்ட நெருக்கடிக்குப் பிந்தைய பொருளாதார நிலைப் படுத்தல் முயற்சியில், இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயல் முறை மிக முக்கியப் பங்காற்றியுள்ளது. இந்த மறுசீரமைப்பானது உடனடி நிதி நிவாரணத்தையும் நீண்டகால நன்மை களையும் வழங்கியதுடன், நாட்டின்

> பொதுக் கடனின் போக்கை கணிசமாக மாற்றியமைத்து, நிதி மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை நோக்கிய பாதையை உருவாக்கியுள்ளது.

5.1.1. உடனடி நிதி நிவாரணம் மற்றும் கடன் குறைப்பு

தேறிய தற்போதய பெறுமதி நிவாரணம்: நாட்டின் மறுசீரமைக்கப்பட்ட தேறிய தற்போதய பெறுமதியில் இம் மறுசீரமைப்பு 41 சதவீத குறைவினை ஏற்படுத்தியது இது படுகடன் சுமையை குறிப்பிடத்தக்களவு தளர்வடையச் செய்தது. இக்குறைவடைதல் அரசிறை ஏற்பாட்டினை உருவாக்கி இன்றியமையாத மீட்சி மற்றும் மறுசீரமைப்பு முன் முயற்சிகளை நோக்கி நிதியங்களை மீள்ஒதுக்கீடு செய்தவதற்கு அரசாங்கத்தினை இயலச்செய்தது.

படுகடன் தீர்ப்பனவு குறைவடைதல்: மறுசீரமைப்பானது இலங்கையின் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவை 2027 தொடக்கம் 2032 வரை ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதமாக மட்டுப்படுத்தி, முக்கிய நிவாரணத்தை வழங்கி அதன் அரசிறைக் கடப்பாடுகளை சிறப்பாக முகாமை செய்வதற்கு அரசாங்கத்திற்கு இடமளித்தது. தவணை தவறுதலை தவிர்ப்பதற்கும் சமூகசேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு போன்ற அத்தியவசிய துறைகளில் முதலீடுகளை இயலச் செய்வதற்கும் இக் குறைப்பு இன்றியமையாது விளங்குகின்றது.

5.1.2. பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தலும் அரசிறை ஒழுக்கமும்

இந்தக் கடன் மறுசீரமைப்பானது, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் இது நிதி ஒழுக்கத்திற்கான தெளிவான இலக்குகளை நிர்ணயிக்க உதவியது. இதன் முக்கிய நோக்கங்களில், 2032-ஆம் ஆண்டிற்குள் பொதுக் கடன் அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதமாகக் குறைப்பதும், 2027 – 2032 காலப்பகுதியில் ஆண்டுதோறும் தேவைப்படும் மொத்த நிதித் தேவையை மொ.உ. உற்பத்தியில் 13 சதவீதத்திற்குக் குறைவாக வைத்திருப்பதும் அடங்கும்.

பேரண்ட இணைப்பு முறிகள் (Macro-Linked Bonds - MLBs) மற்றும் ஆளுகை இணைப்பு முறிகள் (Governance-Linked Bonds -GLBs) அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், கடன் சேவையாற்றுவதில் மேலும் நெகிழ்வுத்தன்மை உறுதிசெய்யப்பட்டு, நிதி சீர்திருத்தங்கள் ஊக்குவிக்கப்பட்டன. பேரண்ட இணைப்பு முறிகள் கடன் செலுத்துதலைப் பொருளாதாரச் செயற்திறனுடன் இணைக்கின்ற, அதேசமயம் ஆளுகை இணைப்பு முறிகள் நிதி மற்றும் ஆளுகை சீர்திருத்தங்கள் அடையப்பட்டால் கூடுதல் நிவாரணத்தை வழங்குகின்றன.

5.1.3. உள்நாட்டு படுகடன் நிவாரணமும் நிதியியல் முறைமை உறுதிப்பாடும்

2023 ஆம் ஆண்டின் உள்நாட்டுக் படுகடன் நடவடிக்கையானது, நிதி முறைமையைச் சீர்குலைக்காமல் உள்நாட்டு நிதியுதவி மீதான அழுத்தத்தைக் குறைப்பதில் ஒரு முக்கியப் பங்காற்றியது.

இந்தத் திட்டம், முதிர்வுக் கால நீட்டிப்புகள் மற்றும் படிப்படியாகக் குறையும் வட்டி விகிதக் கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தின் கடன் சேவைச் செலவுகளைக் குறைப்பதற்கும், மீள்நிதியளிப்பு இடரினைக் குறைப்பதற்கும் பங்களித்தது. இதன்மூலம், கடன் நிலைத்தன்மையை ஆதரித்து, நடுத்தரக் காலக் கடன் விவரத்தை வலுப்படுத்தியது.

இந்த நடவடிக்கைகள் 2023-2027 இடைப்பட்ட காலத்தில், உள்நாட்டுக் கடன் சேவைச் செலவை ஆண்டுதோறும் மொ.உ. உற்பத்தியில் 1.2 சதவீத அளவிற்கு குறைத்துடன்; இதன் மூலம் உள்நாட்டு நிதி நெருக்கடி தவிர்க்கப்பட்டது. (இலங்கையின் அரச கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயன்முறைகளிலிருந்து பெறப்பட்ட பாடங்கள், சர்வதேச நாணய நிதியம், செப்டம்பர் 2025).

5.1.4. மேம்பட்ட வெளிநாட்டு படுகடன் நிலைபெறு தன்மையும் ஒதுக்கு நிலையும்

இந்த மறுசீரமைப்பு, 2023-2027 காலகட்டத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சேவைக்கு ஐ.அ.டொ. 17 பில்லியன் நிவாரணம் அளித்தது. இது செலுத்துச் சமநிலை அழுத்தங்களைக் குறைப்பதற்கும் அந்நியச் செலாவணிக் கையிருப்பை மேம்படுத்துவதற்கும் முக்கியமானதாக அமைந்தது. 2027-2032 காலகட்டத்தில் ஆண்டுதோறும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதம் என்ற உச்சவரம்பில் அந்நியச் செலாவணிக் கடன் சேவையைப் பராமரிப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைத்தன்மை இலக்கு, நாட்டின் வெளிநாட்டுக் கடன் சேவைகளையும் கையிருப்பு நிலையையும் நிலைநிறுத்த உதவும்.

5.1.5. இலங்கையின் கடன் தரப்படுத்தல் பற்றிய இற்றைப்படுத்தல்

2026 ஆகஸ்ட் நிலவரப்படி, இலங்கை தனது வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களில் ஏறக்குறைய 99 சதவீதத்தினருடன் நிபந்தனைகளை எட்டியுள்ளதுடன், தனது பொது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் 94 சதவீதத்திற்கும் மேலானவற்றை முழுமையாகச் செயல்படுத்தியுள்ளது. சர்வதேச இறையாண்மை முறிகள் (ISBs), சீன

அபிவிருத்தி வங்கி மற்றும் சீன எக்ஸிம் வங்கி ஆகியவற்றின் கடன் மறுசீரமைப்புச் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில், உத்தியோகப்பூர்வ கடன் வழங்குநர் குழுவின் உறுப்பினர்களுடன் சுமார் ஐ.அ.டொ. 4.3 பில்லியன் மதிப்பிலான பதினொரு இருதரப்பு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் பத்து கையொப்பமிடப்பட்டுள்ளன. மீதமுள்ள இருதரப்பு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதும், மீதமுள்ள சில சிறிய அம்சங்களைச் செயற்படுத்துவதும் மறுசீரமைப்புச் செயன்முறையை நிறைவு செய்வதற்கான இறுதிப் படிகளாகும் (அட்டவணை 03).

ஒரே பார்வையில் மீள்கட்டமைப்பு (2026 ஆகஸ்ட்)

- வெளிநாட்டு கடனாளிகளின் 99% கீழ் உடன்பட்ட நிபந்தனைகள்
- உடன்பட்ட நிபந்தனைகள் மீள்கட்டமைப்பில் 94% மேல் முழுமையாக
- OCC இருதரப்பு உடன்படிக்கைகளில் ஐ.அ.டொ. 4.3 பில். இறுதிப்படுத்தப்பட்டது (11 இல் 10 ஒப்பமிடப்பட்டது)., ISBs, சீன எக்சிம் வங்கி மற்றும் CDB பூர்த்திசெய்யப்பட்டது

அட்டவணை 03: பொது வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பின் நிலை (2026 ஆகஸ்ட் நிலவரப்படி)

கடன் வழங்குநர் குழு	2025 இறுதியில் நிலுவையில் உள்ளவை (ஐ.அ. டொ. மில்.)	நிலை
உத்தியோகப்பூர்வ கடன் வழங்குவோர் குழு (17 உறுப்பினர்கள்)	5,812	நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன, 11 இருதரப்பு ஒப்பந்தங்கள் (ஐ.அ.டொ. 4.3 பில்லியன்) இறுதி செய்யப்பட்டன, அவற்றில் 10 கையொப்பமிடப்பட்டன; 6 உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.
சீன எக்ஸிம் வங்கி	4,225	செயற்படுத்துகை நிறைவடைந்தது
அரபு பொருளாதார அபிவிருத்திக்கான சவுதி நிதியம் மற்றும் குவைத் நிதியம்	291	செயற்படுத்துகை நிறைவடைந்தது
சர்வதேச இறையாண்மை முறிகள்	10,255	செயற்படுத்துகை நிறைவடைந்தது
சீன அபிவிருத்தி வங்கி	3,222	செயற்படுத்துகை நிறைவடைந்தது
ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முறிகள்	175	செயற்படுத்துகை நிறைவடைந்தது
ECA ஆதரவு பெற்ற பிற கடன்கள், இருதரப்பு மற்றும் வணிகக் கடன்கள்	~235	தொகையின் ஒரு பகுதிக்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. எஞ்சியவை குறித்த பேச்சுவார்த்தைகளும் கடன் ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
பங்கேற்காத ISB உரிமையாளர்	~250+	நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன

மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி (முதலீட்டாளர் அழைப்பு, 2026 ஆகஸ்ட் 10). இந்தத் தொகைகளில் காலாவதியான வட்டி சேர்க்கப்படவில்லை, ஆனால் அரசுடமை தொழில்முயற்சிகளின் (SOE) உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன் சேர்க்கப்பட்டுள்ளது.

5.2. இலங்கையின் கடன் தரவரிசைகள் மேம்படுத்தப்பட்டன

இலங்கையின் வெற்றிகரமான இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அந்நாட்டின் கடன் மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிட்ச் ரேட்டிங்ஸ், மூடிஸ் ரேட்டிங்ஸ் மற்றும் எஸ்அன்ட்பி குளோபல் ரேட்டிங்ஸ் ஆகியவற்றின் இந்த மேம்படுத்தல்கள், 2022 ஏற்பட்ட இறையாண்மைக் கடன் தவறுதலுக்குப் பிறகு, அந்நாடு தனது பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும், கடன் தவறும் அபாயத்தைக் குறைக்கவும், நிதி சீர்திருத்தங்களைச் செயற்படுத்தவும் மேற்கொண்ட முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றன. 2026 செப்டம்பர் 22 அன்று பிட்ச் நிறுவனம் மதிப்பீட்டை "B-" ஆக உயர்த்தியது, கடன் தவறுதலுக்குப் பிறகு இந்த மூன்று நிறுவனங்களில் ஏதேனும் ஒன்று ஒற்றை-B பிரிவிற்குள் எடுத்த முதல் நடவடிக்கையாகும்.

5.2.1. கடன் மதிப்பீடு மேம்பாட்டிற்கான காரணிகள்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் வலுவான செயல்பாடு: சுமார் ஐ.அ.டொ. 3 பில்லியன் நிதி அணுகலுடன், 2023 மார்ச் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட 48 மாத கால சர்வதேச நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் வெற்றிகரமான செயலாக்கம், இலங்கையின் இறையாண்மைக் கடன் தகுதியை வலுப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளது. இந்தத் திட்டம், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் பேரண்டப் பொருளாதார நிலைப்படுத்தலுக்கு ஆதரவளித்துள்ளது. 2026 மே மாதத்தில் ஒருங்கிணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆய்வுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் மொத்த நிதி வழங்கல்கள் சுமார் ஐ.அ.டொ. 2.4 பில்லியன் எட்டியுள்ளன. அதே நேரத்தில், ஏழாவது ஆய்வு குறித்த பணியாளர் மட்டத்திலான உடன்பாடு 2026 அக்டோபரில் எட்டப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் வெற்றிகரமான நிறைவு மற்றும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார அடிப்படைகள்: கடன் மறுசீரமைப்புச் செயன்முறை வெற்றிகரமாக நிறைவடைந்திருப்பது, இலங்கையின் கடன் நிலைத்தன்மை குறித்த எதிர்பார்ப்புகளை கணிசமாக மேம்படுத்தியுள்ளதுடன், முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்தியுள்ளது. இதன் விளைவாகக் கிடைத்த கடன் சேவைச் சுமை குறைப்பு மற்றும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் ஆகியவை, நாட்டின் கடன் பொறுப்புகளை நிறைவேற்றும் திறனை அதிகரித்துள்ளன.

5.2.2. கடன் மதிப்பீடு மேம்படுத்தல்களின் தாக்கம்

இந்தத் தர உயர்வுகள், எதிர்காலத்தில் கடன் தவணைகள் தவறவிடப்படுவதற்கான அபாயத்தைக் குறைப்பதோடு, சர்வதேச சந்தைகளை அணுகுவதில் ஒரு நேர்மறையான அணுகுமுறையையும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தத் தர உயர்வுகள், மேம்பட்ட கடன் மேலாண்மைக் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றன; அடுத்த பத்தாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடனான கடன் விகிதங்கள் படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது முதலீட்டாளர்களின் மனநிலையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, இலங்கை தனது கடனை நிர்வகிப்பதற்கும் தேவையான சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கும் உள்ள திறனில் நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இருப்பினும், மூன்று தரமதிப்பீடுகளுமே ஊகத் தரப் பகுதியிலேயே நீடிக்கின்றன. 2026-ஆம் ஆண்டில் அரசாங்கக் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 92.9 சதவீதமாக இருக்கும் என ஃபிட்ச்

மதிப்பிடுகிறது; இது 'பி' தரமதிப்பீடு பெற்ற நாடுகளின் சராசரியை விட மிகவும் அதிகமாகும். மேலும், அரசாங்க வருவாயில் 40 சதவீதத்திற்கும் அதிகமான தொகையை வட்டிச் செலவுகள் எடுத்துக்கொள்வதால், கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் பலவீனமாக இருப்பதாக மூடிஸ் சுட்டிக்காட்டுகிறது. வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு, கையிருப்புத் திரட்டல் மற்றும் மறுசீரமைப்பை நிறைவு செய்தல் ஆகியவற்றில் ஏற்படும் மேலதிக முன்னேற்றங்களே எதிர்காலத் தர உயர்வுகளுக்கு முக்கியக் காரணிகளாக அமையும்.

அட்டவணை 04: இலங்கையின் அரச கடன் தரவரிசைகள் (2026 அக்டோபர்)

தரமதிப்பீட்டு நிறுவனம்	நீண்டகால அந்நியச் செலாவணி மதிப்பீடு	நிலைப்பாடு	சமீபத்திய நடவடிக்கை
பிட்ச் ரேட்டிங்ஸ்	B-	நிலையானது	2026 செப்டம்பர் 22 அன்று CCC+-லிருந்து மேம்படுத்தப்பட்டது
மூடிஸ் ரேட்டிங்ஸ்	Caa1	நிலையானது	2024 டிசம்பரில் 'Ca' நிலையிலிருந்து மேம்படுத்தப்பட்டு, 2026 ஆகஸ்ட்டில் உறுதி செய்யப்பட்டது.
எஸ் அன்ட் பீ குளோபல் ரேட்டிங்ஸ்	CCC+	நிலையானது	2025 செப்டம்பரில் SD யிலிருந்து மேம்படுத்தப்பட்டதிலிருந்து மாற்றமின்றி உள்ளது

மூலம்: பிட்ச் ரேட்டிங்ஸ், மூடிஸ் ரேட்டிங்ஸ், எஸ் பி குளோபல் ரேட்டிங்ஸ்

6. அடிப்படைப் பேரண்டப் பொருளாதார ஊகங்கள்

படுகடன் முகாமைத்துவ உபாயம் பற்றிய சாத்தியப்பாடானது வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், அரசிறை சதவீதங்கள், செலாவணி வீதங்கள் என்பன பற்றிய எதிர்வு கூறலுக்கு துணை அளிக்கின்ற நாட்டின் ஆற்றல் வாய்ந்த பேரண்டப் பொருளாதார கட்டமைப்பின் மீதே அதிகளவு சார்ந்திருக்கின்றது. படுகடன் முகாமைத்துவ உபாயத்திற்கும் பேரண்டப் பொருளாதார கட்டமைப்புக்கும் இடையில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருப்பதைக் கவனத்தில் கொள்வதை இரு உபாயங்களுக்கு மத்தியிலும் ஒத்திசைவுகளைப் பேணுவது இன்றியமையாததாக விளங்குகின்றது.

எனவே, 2027-2031 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிக் கட்டமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்ட பேரண்ட நிதிக் கட்டமைப்பு மற்றும் 2027 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட முன்னறிவிப்புகளுடன் சீரமைத்து, 2027-2031 ஆம் ஆண்டுக்கான இடைக்காலக் கடன் உறுதி அறிக்கை (MTDS) உருவாக்கப்பட்டுள்ளது. இடைக்காலக் கடன் உறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்காக, அடிப்படைப் பேரண்டப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் அபாயமும், படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் மீதான அவற்றின் சாத்தியமான தாக்கமும், உத்திசார் காலம் முழுவதும் நிலையானதாக இருக்கும் என்று அனுமானிக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் இலங்கையின் பணவீக்க முன்னறிவிப்புகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் பெறுகை சக்தி சமநிலை மாதிரியைப் பயன்படுத்தி, இடைக்காலத்திற்கான மாற்று விகிதம் முன்னறிவிக்கப்பட்டது. ப்ளூம்பெர்க் முன்னறிவிப்புகளின் அடிப்படையில் SOFR விகிதம் முன்னறிவிக்கப்பட்டது. மேலும், நாட்டின் பணவீக்க இலக்குகள் மற்றும் உத்தியோகபூர்வ கொள்கை விகிதத்திற்கு சந்தை விகிதத்தின் நகர்வைக் கருத்திற் கொண்டு, உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான வட்டி விகிதங்கள் முன்னறிவிக்கப்பட்டன.

2027-2031 ஆம் ஆண்டிற்கான பேரண்ட நிதிச் சட்டகம், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள கடன் குறைப்பு மற்றும் கடன் நிலைத்தன்மை இலக்குகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகள், சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி உடன்படிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன் நிலைத்தன்மை இலக்குகளுடன் ஒத்திசைந்துள்ளன.

1. 2032 ஆம் ஆண்டிற்குள் பொது படுகடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி இடையிலான விகிதத்தை 95 சதவீதத்திற்குக் கீழே குறைத்தல்,
2. 2027 முதல் 2032 வரையிலான காலகட்டத்தில், மத்திய அரசின் ஆண்டு மொத்த நிதித் தேவையை சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்குக் கீழே பராமரித்தல்,
3. 2027 முதல் 2032 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும், மத்திய அரசின் அந்நியச் செலாவணியிலான ஆண்டு படுகடன் சேவைச் செலவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்குக் கீழே பராமரித்தல்.

6.1 சமீபத்திய பேரண்டப் பொருளாதார நிகழ்வுகள் மற்றும் கண்ணோட்டம்

இலங்கைப் பொருளாதாரம், நவம்பர் 2025 இல் ஏற்பட்ட தித்வா சூறாவளி மற்றும் 2026 பிப்ரவரி இறுதி முதல் தீவிரமடைந்த மத்திய கிழக்கு மோதல் போன்ற தொடர்ச்சியான அதிர்ச்சிகளைத் தாங்கும் வலிமையைக் வெளிப்படுத்தியுள்ளது. 2025 ஆம் ஆண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 5.0 சதவீதம் வளர்ச்சியடைந்தது. 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் 5.1 சதவீத வளர்ச்சியும், இரண்டாம் காலாண்டில் 4.2 சதவீத வளர்ச்சியும் பதிவாகியுள்ளன; இதன் மூலம் தொடர்ந்து பன்னிரண்டு காலாண்டுகளாகப் பொருளாதார வளர்ச்சி நீடிக்கிறது. எரிசக்தி விலையேற்றம் மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் 2026 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரக் கண்ணோட்டத்தைப் பலவீனப்படுத்தியிருந்தாலும், அந்த ஆண்டில் 3.8 சதவீத பொருளாதார வளர்ச்சியை இலங்கை எதிர்பார்க்கிறது. மேலும், 2027 இல் வளர்ச்சி விகிதம் 4.0 சதவீதமாக மீட்சியடையும் என்றும், நடுத்தர காலத்தில் சுமார் 4.1 சதவீத அளவை எட்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் சராசரியாக -0.5 சதவீதமாக இருந்த ஒட்டுமொத்த பணவீக்கம், 2026 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் ஆண்டு அடிப்படையில் 8 சதவீதமாக உயர்ந்தது. இது, எரிசக்தி விலையில் ஏற்பட்ட அதிர்ச்சி பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த அளவு மத்திய வங்கியின் 5 சதவீத இலக்கை விட அதிகமாக இருந்தாலும், பணவீக்கம் குறித்த எதிர்பார்ப்புகள் ஒட்டுமொத்தமாக நிலையான அளவிலேயே நீடிக்கின்றன. 2026 ஆகஸ்ட் மாத இறுதியில், நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ அந்நியச் செலாவணி கையிருப்பு ஐ.அ.டொ. 6.9 பில்லியனாக இருந்தது. (2026 ஜூன் இறுதியில் இது ஐ.அ.டொ. 6.5 பில்லியனாக இருந்தது). நிதி நிலையைப் பொறுத்தவரை, மத்திய அரசு 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீத அளவிலான முதன்மை மிகையை எட்டியதுடன்; இது திட்டமிடப்பட்ட இலக்கான 2.3 சதவீதத்தை விட கணிசமாக அதிகரித்தது. 2026 ஆம் ஆண்டில் முதன்மை மிகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது, தற்காலிக நிவாரணத் தொகுப்பு மற்றும் சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைப்பதற்கான செலவுகளை உள்ளடக்கியதாகும். நடுத்தர காலத்தில், இந்த முதன்மை மிகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.0 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேரண்டக் கண்ணோட்டம்

- வளர்ச்சி: 2026 இல் 3.8% (2025 இல் 5.0%) என இருக்கும்; 2027-இல் மீண்டும் 4.0%-ஆக உயரும்
- பணவீக்கம்: 2026 ஆகஸ்ட்-செப்டம்பரில் ஆண்டு அடிப்படையில் 8% (5% இலக்குக்கு எதிராக)
- ஒதுக்குகள்: 2026 ஆகஸ்ட் இறுதியில் ஐ.அ.டொ. 6.9 பில்லியன்
- 2026 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3.6% அளவுக்கு முதன்மை மிகை

அட்டவணை 05: அடிப்படை பேரண்டப் பொருளாதார அனுமானங்கள்

சுட்டி	2026 F	2027F	2028F	2029F	2030F	2031F
உண்மையான மொ. உ. உற்பத்தி வளர்ச்சி (சதவீதம்) [5]	3.8	4.0	4.1	4.1	4.2	4.2
உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (சதவீதம்) [6]	5.4	4.7	5.1	5.0	5.0	5.0
பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (சதவீதம்)[5]	10.0	8.2	8.3	8.4	8.5	8.7
முதன்மை இருப்பு [5]	3.6	2.3	3.0	3.0	3.0	3.0
மொத்த சர்வதேச ஒதுக்குகள் (ஐ.அ.டொ. மில்.) [7]	8,645	11,779	13,939	14,474	14,746	14,985

மூலம்: அரசிறை செயல்நுணுக்க அறிக்கை 2027; நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு. இலங்கை மத்திய வங்கி

[5] திருத்தப்பட்ட நடுத்தரக் கால அரசிறை செயல்நுணுக்க அறிக்கையில் இடம்பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில்.

[6] 2026 செப்டம்பர் 19 அன்று இ.ம. வங்கியினால் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில்.

[7] 2026 மே மாதத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் நாட்டு அறிக்கையின் அடிப்படையில்.

பேரினப் பொருளாதாரச் சூழலில், மொத்த பொது படுகடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் காணப்படும் சரிவுப் போக்கு, நிதிச் செலவுகளைக் குறைப்பதில் கூடுதல் கவனம் செலுத்த அரசாங்கத்திற்கு வழிவகுக்கும். தற்போதைய நிதிச் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் முகாமைத்துவ மூலோபாயம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவாக—குறிப்பாக, நியாயமான இடர் அளவைப் பேணிக்கொண்டே செலவு குறைந்த மூலங்களிலிருந்து நிதியைப் பெறுவதில் கவனம் செலுத்துவதன் மூலம் தமது கடன் நிலைத்தன்மை இலக்குகளை அடைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

7. 2027 – 2031 காலப் பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபயம்

இலங்கையில் பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான மூலோபாயக் கட்டமைப்பானது அரசாங்க படுகடன் சொத்துப் பட்டியலின் திட்டவட்டமான இடர் சகிப்பு மற்றும் செலவுக் குறிக்கோள்கள் என்பவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் படுகடன் சந்தையை விரிவுபடுத்தி வெளிநாட்டு நிதியியல் சந்தைக்கு மீள்நுழைவதை நோக்காகக்கொண்ட வழிமுறைகளை இது கூட்டிணைப்பதுடன், அரசிறை மற்றும் நாணயக் கொள்கைக் குறிக்கோள்களுடன் ஒத்திசைவினை உறுதி செய்கின்ற நடுத்தர கால பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்களினால் ஆதரவளிக்கப்படுகின்றது.

7.1 2031 இறுதியில் படுகடன் முகாமைத்துவ இலக்குகள்

அட்டவணை 06 : 2031 இறுதியில் படுகடன் முகாமைத்துவ இலக்குகள்

செலவு மற்றும் இடர்குறிகாட்டிகள்	மட்டம் (2025 இறுதி)	இலக்கு மட்டம் (2030 இறுதி)	தற்போதுள்ள மட்டம் (2026 இறுதி)	இலக்கு மட்டம் (2031 இறுதி)	சகிப்பு
முதிர்ச்சிக்கான சராசரிக் காலம்					
உள்நாட்டு படுகடன் சொத்துப்பட்டியல்	4.6 ஆண்டுகள்	6 ஆண்டுகள்	4.7 ஆண்டுகள்	6 ஆண்டுகள்	1+/-
மொத்தப் படுகடன் சொத்துப்பட்டியல்	6.8 ஆண்டுகள்	8 ஆண்டுகள்	6.6 ஆண்டுகள்	8 ஆண்டுகள்	
மொத்தப் படுகடனுக்கான திறைசேரி உண்டியல் சதவீதம்	10.1%	5%	6.6%	3.5%	1+/-
ஒரு ஆண்டில் படுகடனை மீளமைத்தல் (மொத்தத்திற்கான சதவீதம்)	26.8%	22%	24.1%	20%	1+/-
ஒரு ஆண்டில் படுகடன் முதிர்ச்சி (மொ.உற்பத்தியின் சதவீதம்)	17%	10%	12.4%	9%	2+/-
வருவாய்க்கான வட்டிக் கொடுப்பனவுகள் (சதவீதமாக)	52.2%	35%	44.6%	34%	5+/-
மொத்தப் படுகடனின் சதவீதமாக வெளிநாட்டுச் செலவணியின் சதவீதம்	37.8%	-	41.0%	30%	2+/-

மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

செலவு மற்றும் இடர் என்பவற்றிற்கிடையில் உகப்பான விட்டுக்கொடுப்பினை உறுதிசெய்வதற்காக ஒவ்வொன்றும் வேறுபட்ட கடன்பெறுதல் உள்ளமைப்புடன் நான்கு மாற்றுவழி நிதியிடல் உபாயங்கள் பரீட்சிக்கப்பட்டன. அதற்கமைய இம்மூலோபாயங்கள் ஒவ்வொன்றும் சாத்தியமான மூலத்துடன் இணைந்த கிடைக்கப்பெறும் தன்மை, செலவு இடர் என்பவற்றை பரீசீலனையில் கொண்டன. கருத்திற்கொள்ளப்பட்ட முக்கிய காரணிகள் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் திறைசேரி உண்டியல்களில் அதிகளவு தங்கியிருத்தல், உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சித் தொகுப்பை குறுக்கமடையச் செய்தல், நீண்ட கால முதிர்ச்சிகளுடன் சர்வதேச நிதியியல் நிறுவனங்களில் இருந்து வெளிநாட்டு நிதியிடல் கிடைக்கப்பெறுதல், சர்வதேச நிதியியல் சந்தைக்கு மீள்நுழைவதற்கான வாய்ப்பு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பெயர் குறிக்கப்பட்ட உள்நாட்டு பல்கடன் பிணையங்களை வழங்குவதற்கான விருப்பம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இக்கரிசணைகள் 2027 – 2031 காலப்பகுதிக்கான உகப்பான நிதியிடல் மூலோபாயத்தின் தெரிவினை வழிநடாத்தின.

7.2 2027 – 2031 காலப் பகுதிக்கான நிதியிடல் மூலோபாயம்;

2027 – 2031 காலப் பகுதிக்கான நிதியிடல் மூலோபாயமானது அட்டவணை 06 இல் விளக்கப்பட்ட படுகடன் முகாமைத்துவ இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்ட நடுத்தர காலத்தில் கடன் பெறுதலுக்கான மூலோபாய வழிகாட்டல்களை ஏற்பர்டு செய்கின்றது. முக்கிய மூலோபாயப் பணிப்புரைகள் பின்வருமாறு:

அ. கடன் பெறுதல் உள்ளமைப்பு : 2027 – 2028 இல் ரூபா பெயர் குறிக்கப்பட்ட படுகடன் சாதனங்களில் இருந்து 88 சதவீதம் மற்றும் வெளிநாட்டு நாயணங்கள் பெயர் குறிக்கப்பட்ட படுகடன் சாதனங்களில் இருந்து 12 சதவீதம் கொண்ட கடன்பெறுதல் உள்ளமைப்பைப் பேணுதல், அதன்பின்னர், சந்தை நிலைமைகள் மற்றும் முதலீட்டாளர்களின் ஏற்பு அத்துடன், நடத்தை என்பவற்றை கருத்திற்கொண்டு கடன்பெறுதல் மூலோபாயமானது முதிர்ச்சியடைகின்ற வெளிநாட்டு நாணயப் படுகடனை மீளச்செலுத்துவதற்கான வெளிநாட்டு நாணய திரவத்தன்மை தேவைப்பாட்டினை உறுதி செய்வதற்கு மூலோபாய ரீதியாக தயாரிப்பதற்கான வெளிநாட்டு நாணய பெயர் குறிக்கப்பட்ட சாதனங்களில் இருந்து 15 சதவீதத்திற்கு மாற்றப்படும்.

ஆ. வெளிநாட்டு நாணய நிதியிடல் மூலோபாயம் : இலங்கை உலக வங்கியினால் மேல் நடுத்தர வருமான நாடாக தரமுயர்த்தப்பட்டுள்ளமையினால், வெளிநாட்டு இரு தரப்பு மற்றும் பல்தரப்பு முகவராண்மைகளிடமிருந்து சலுகை நிதியிடல் கிடைக்கப் பெறுவது நடுத்தர காலத்தில் படிப்படியாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக தோற்றம் பெறும். எனினும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சலுகைக் காலத்துடன், 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட கால முதிர்ச்சிகளுடன் கூடிய கொள்கை அடிப்படையில் அமைந்த அல்லது நிகழ்ச்சித் திட்டம் அடிப்படையில் அமைந்த நிதியியலுக்காக சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கிடைக்கப் பெறுகின்ற வாய்ப்புக்களை இலங்கை ஆராயும்.

சாதகமான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு இருதரப்பு மற்றும் பல்தரப்பு முகவராண்மைகளிடமிருந்து கருத்திட்ட நிதியிடலை தொடர்வதற்கு இலங்கை மேலும் அர்ப்பணித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு நிதியிடல் தேவைகளை நிறைவு செய்வதற்காக உள்நாட்டுச் சந்தையில், வெளிநாட்டுச் செலாவணி பேர் குறிக்கப்பட்ட முறிகளை வழங்குவது கருத்திற்கொள்ளப்படும். வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையுடன் கூடிய உள்நாட்டு முதலீட்டார்களை அரசாங்க பிணையங்கள் சந்தைக்குள் ஈர்த்தல் மற்றும் முதலீட்டாளர் தளத்தினை பன்முகப்படுத்தல் என்பன மேலும் வலுப்படுத்தப்படும்.

இ. **உள்நாட்டு நாயண நிதியிடல் உபாயம் :** உள்நாட்டுப் பக்கத்தில் நிதியிடல் மூலோபாயமானது சந்தை அடிப்படையில் அமைந்த சாதனங்கள், அதாவது பிரதானமாக திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் மீது முழுமையாக மையப்படுத்தியுள்ளது. திறைசேரி உண்டியல்கள் மீது தங்கியிருத்தலை படிப்படையாக குறைப்பதன் மூலம் மீள்நிதியிடல் இடரை முகாமை செய்வதை நோக்காகக் கொள்கின்றது. சராசரி முதிர்ச்சியை நீடிப்பதற்கும், மீட்புத் தொகுப்பினை சீரமைப்பதற்கும், 3, 5, 8, 10, 12 மற்றும் 15 ஆண்டுகளைக் கொண்ட, முதிர்ச்சிகளுடன் கூடிய நிலையான வீத திறைசேரி முறிகளின் திட்டமிடப்பட்ட வழங்களின் ஊடாக இதற்கு துணையளிக்கப்படும்.

நடுத்தர கால படுகடன் மூலோபாய பகுப்பாய்வுக் கருவியின் பிரகாரம் மேற்குறித்த மூலோபாயத்தை பயன்படுத்தி 2031 ஆண்டிறுதியில் உள்ள மட்டம் அட்டவணை 07 இல் காண்பிக்கப்படுகின்றன.

அட்டவணை 07 : செலவு மற்றும் இடர் குறிகாட்டி – அடிப்படைச் சூழ்நிலை

இடர் குறிகாட்டிகள்		2026 நடப்பு	2031 இறுதியில் உள்ளவாறு
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பெயரளவு அரசாங்கப் படுகடன்		89.0	78.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக படுகடன் தற்போதைய பெறுமதி		87.1	76.6
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வட்டிக் கொடுப்பனவு		7.4	6.3
வருவாயின் சதவீதமாக வட்டிக் கொடுப்பனவு		44.6	40.0
உள்ளார்ந்த வட்டி வீதம் (சதவீதம்)		8.2	8.7
மீள் நிதியிடல் இடர் [2]	1 ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற படுகடன் (மொத்த சதவீதம்)	12.8	12.4
	1 ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற படுகடன் (மு.உ.உ. %)	12.4	9.7
	சராசர கால முதிர்ச்சி வெளிநாட்டு சொத்துப்பட்டியல் (ஆண்டுகள்)	8.9	8.1
	சராசர கால முதிர்ச்சி உள்நாடு சொத்துப்பட்டியல் (ஆண்டுகள்)	4.7	4.7
	சராசர கால முதிர்ச்சி மொத்த சொத்துப்பட்டியல் (ஆண்டுகள்)	6.6	6.0
வட்டிவீத இடர் [2]	மீளமைப்பதற்கான சராசரி காலம் (ஆண்டுகள்)	5.7	4.9
	1 ஆண்டில் மீளமைக்கும் படுகடன் (மொத்த சதவீதம்)	24.1	23.3
	திறைசேரி உண்டியல்கள் உட்பட நிலையான வீதப் படுகடன் (மொத்தத்தின் சதவீதம்)	88.1	88.3
	திறைசேரி உண்டியல்கள் (மொத்தத்தின் சதவீதம்)	6.6	3.8
வெளிநாட்டுச் செலாவணி வீத இடர்	மொத்தத்தின் சதவீதமாக வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன்	41.0	35.8
	ஒதுக்குகளின் சதவீதமாக குறுகிய கால வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன்	19.7	5.9

மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலவலகம், IMF/WB MTDS AT இலிருந்து பெற்றுக்கொண்டவை

நடுத்தர கால படுகடன் மூலோபாயம் 2027 – 2031 இன் செயல்திறன் வாய்ந்த நடைமுறைப்படுத்தலுக்கும், அட்டவணை 06 இல் வரைவிளக்கனம் செய்யப்பட்ட படுகடன் முகாமைத்துவ இலக்குகளை அடைவதற்கும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் பின்வருவனவற்றில் கவனம் செலுத்தும்:

I. **அரசாங்க உள்நாட்டு முறிச்சந்தையினை விருத்தி செய்தல்,** அரசாங்க படுகடன் பிணையங்களுக்கான முதலீட்டாளர் தளத்தை விரிவுபடுத்தல் மற்றும் உள்நாட்டுச் சந்தையை விருத்தி செய்தல் ஊடாக இடம்பெறும் முதனிலை வணிகர் முறைமை மற்றும் உள்நாட்டு படுகடன் சந்தை என்பன பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய பகுப்பாய்வு நடாத்தப்பட்டு சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கு இசைவாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

II. **நாட்டுக்கான பன்நாட்டு முறிச்சந்தைக்கு மீள நுழைவதற்கு வழிகாட்டல் அமைத்தல்,** படுகடன் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் ஐ.அ.டொலர்களின் பெயர் குறிக்கப்பட்ட புதிதாக வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்நாட்டு முறிகளின் முதிர்ச்சிக் கட்டமைப்பு 2028 இலிருந்து தொடங்குகின்ற குறிப்பிடத்தக்க மீட்டல்களை பிரதிபலிக்கின்றது. அதற்கமைய நாட்டுக்கான பன்நாட்டு முறிச் சந்தையினுள் மீள்நுழைவதற்கு முன்கூட்டியே தயார்படுத்தல் வழிமுறைகளை தொடங்குவதற்கு தேவைப்படுகின்றது. வலுவான பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் மற்றும் சார்பான கடன் தரப்படுத்தல் என்பன முக்கிய முன்தேவைப்படுத்தல்களாகக் காணப்படுகின்ற அதேவேளை முதலீட்டாளர் உறவுகளை அதிகரித்தல் மற்றும் படுகடன் வெளிப்படு தன்மையை மேம்படுத்தல் என்பன சமமான முக்கியத்துவம் மிக்கதாகவிருக்கும் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் இலங்கை அரசாங்க படுகடன் சாதனங்களில் முதலிடுவதற்கான விருப்பத்தினையும் அதிகரிப்பதற்கு வடிவமல்லா வீதிக் காட்சிகளை நடாத்துவதற்கு தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சீரான மீளநிதியிடல் செயன்முறை ஒன்றை உறுதி செய்வதற்கு இத் தயார்படுத்தல் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

III. **ஏற்கனவே காணப்படுகின்ற அரசாங்க படுகடன் சொத்துப் பெட்டிகளின் கட்டமைப்பினையும் இடர் தொகுப்பையும் செயலூக்கத்துடன் முகாமை செய்வதற்கு பொறுப்பு முகாமைத்துவ தொழிற்பாடுகள்.** ஏற்கனவே காணப்படுகின்ற படுகடன் சொத்துப் பட்டியல்களின் நிதியிடல் இடரை முகாமை செய்தல் உள்நாட்டு படுகடன் சந்தையினை விருத்தி செய்தல், படுகடன் தீர்ப்பனவு செலவை சாத்தியமானளவு குறைத்தல் ஆகிய நோக்கங்களுக்காக பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு படுகடன் சொத்துப்பட்டியலின் சராசரி காலமுதிர்ச்சியினை அதிகரிப்பதை பிரதானமாக மையப்படுத்தி மீளக்கொள்வனவு செய்தல், மாறுதல் போன்ற பொறுப்பு முகாமைத்துவ தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

படுகடன் சொத்துப் பட்டியலின் மீள்நிதியிடல் இடர், நாணய இடர் மற்றும் வட்டிவீத இடர் என்பவற்றைக் குறைப்பதற்கான முதன்மைக் குறிக்கோளுடன் மீளக் கொள்வனவு செய்தல், மாறுதல் நாணய மற்றும் வட்டிவீத மாற்றுதல் போன்ற வெளிநாட்டு படுகடன் சொத்துப் பட்டியலுக்கான பொறுப்பு முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அரசாங்க படுகடன் சொத்துப் பட்டியலில் இடர் சகிப்பு மட்டத்தினை பகுப்பாய்வு செய்து காப்பு கொள்கையொன்று உருவாக்கப்படும்.

மேலும், அனர்த்தம் தொடர்புடைய அரசிறை இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு முகாமை செய்வதற்கு

அனைத்தையும் உள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை நிறுவுவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களுக்கான அரசாங்கத்தின் நிதியியல் தயார் நிலை மற்றும் தாக்குப் பிடிக்கும் தன்மை என்பவற்றை வலுப்படுத்துவதற்கு அனர்த்த இடர் நிதியிடல் மூலோபாயமொன்று உருவாக்கப்படும். இதற்கு மேலதிகமாக அனர்த்த இடர் முகாமைத்துவத்திற்கான அரசாங்கத்தின் நிதியிடல் கருவித் தொகுதியினை மேலும் விரிவுபடுத்தி இது அவசரகால நிதியிடல் வசதிகள் இறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அனர்த்தங்கள் நிகழ்களில் உரிய காலத்தில் நிதியியல் வளங்களை திரட்டி அரசிறை அனர்த்தங்களைத் தணித்து ஒட்டுமொத்த அரசிறை தாக்குப் பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இயலளவை இவ் முயற்சிகள் அதிகரிக்கும்.

IV. பொதுப்படுகடன் வெளியீடுகளின் மற்றும் ஈடுபாட்டு மூலோபாயத்தின் உள்ளடக்கத்தை சீரமைத்தல் மற்றும் விரிவுபடுத்தல் ஊடாக படுகடன் முகாமைத்துவத்தின் ஆளுகையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்தல். ஒவ்வொரு நிதியாண்டின் பின்னரும் 180 நாட்களுக்குள் ஆண்டறிக்கையை வெளியிடுவதை இது உள்ளடக்குகின்றது. இவ்வறிக்கை பொது முகாமைத்துவம் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய நுண்நோக்குகளை வழங்கும். இதற்கு மேலதிகமாக ஆர்வளர்களுக்கு மிகவும் விரிவான மற்றும் உரிய காலத்தில் தகவல்கள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்து காலாண்டு படுகடன் செய்தித்திரட்டு மற்றும் அரையாண்டு படுகடன் தரவு அறிக்கை என்பன தரம் மற்றும் உள்ளடக்கம் இரு நியதிகளிலும் மேலும் தர முயர்த்தப்படும்.

மத்திய மயப்படுத்தப்பட்ட தகவல்களுக்காக எளிதான பெறுவழி பயனாளர் பெறுவழியை மேம்படுத்துதல் மற்றும் பொதுமக்களுடனும் பங்கேற்பாளர்களுடனும் அதிக இடைத்தொடர்பு தொடர்பாடலை வசதிப்படுத்தல் என்பவற்றுக்கான பிரத்தியேகமான வலைத்தளமொன்றினூடாக தொடர்பாடல் மார்க்கங்கள் மேலும் வலுப்படுத்தப்படும். மேலும், வரவிருக்கும் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மீள்நிதியிடல் மூலோபாயத்தை ஆண்டு கடன் பெறுகைத் திட்டம் எடுத்துரைக்கும். நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2027-2031 இன் வழிகாட்டல்களுக்கு இசைவாக இத்திட்டம் உருவாக்கப்பட்டு அரசாங்கத்தின் கடன்பெறு அணுகுமுறை நீண்டகால அரசிறை இலக்குகளுடன் ஒத்திசைவானது என்பதை உறுதிசெய்து உள்நாட்டு படுகடன் பிணையங்கள் ஏல நாட்காட்டி ஆண்டுக் கடன்பெறுகைத் திட்டத்துடன் அணிசேர்ந்திருந்து நீடிக்கின்ற காலாண்டு அடிப்படையில் வெளியிடப்படும். ஏதேனும், குறிப்பான படுகடன் வழங்கலுக்கு முன்னர் மூன்று மாத முன்கூட்டிய அறிவித்தலுடன் சந்தை ஒத்திசைவாக இற்றைப்படுத்தப்படுவதை இது உறுதி செய்யும் .

V. திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கு துணையளித்தல் வினைத்திறன் மிக்க நிதியிடல் மற்றும் மீள்நிதியிடல் அத்துடன் வட்டி வீத இடரைத் தணித்தல் என்பவற்றுக்காக காசு ஒதுக்குகளை முழு உபாய ரீதியாக உபயோகித்தல். புதிய படுகடனை ஏற்படுத்தாது அல்லது சாத்தியமான அளவு உயர்வான வட்டி வீதங்களில் படுகடனை நீடிக்காது திறைசேரி உண்டியல்கள் அல்லது குறுகிய கால முறிகள் போன்ற முதிர்ச்சியடைகின்ற படுகடன் சாதனங்களை மீள்

கொடுப்பனவு செய்வதற்கு முன்மதி உடையதாகவிருக்கும் காசுதாங்கி இருப்பு பணிக்கு அமர்த்தப்படும். காசு தாங்கி இருப்பின் உவப்பான அளவானது படுகடன் தீர்ப்பனவு கடற்பாடுகள் (திரவத் தன்மை இடர்), வருவாய்கள் அல்லது சந்தை பெறுவழியில் தளம்பல் (அதிர்வு ஈர்த்தல்) அவசர நிலைகளுக்கான எதிர்பாரா செலவு என்பவற்றுக்காக குறுகிய கால கடப்பாடுகளை சமாளிக்கின்ற அதேவேளை மிதமிஞ்சிய இயங்காத நிதியங்களைத் தவிர்ப்பதற்கு போதுமான காசினை வைத்திருக்கும் நோக்குடன் உரிய கருசணை செலுத்தி நிர்ணயிக்கப்படும். வட்டிவீத மற்றும் மீள்நிதியிடல் இடர்களைத் தவிர்ப்பதற்கு கட்டமைக்கப்பட்ட விதத்தில் காசு தாங்கி இருப்புகளின் உபயோகத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அவசியமான பரிந்துரைகளை வழங்கி முறைமை சார்ந்த அணுகு முறையை உறுதிசெய்து தேவைக்கேற்றவாறான நடத்தைகளை தவிர்க்கும்.

VI. **பண இருப்புகளை உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்துவது,** பணப்புழக்க முகாமைத்துவமானது, நிதி செயல்திறன் ஆகியவற்றை ஆதரிப்பதோடு, மறுநிதியளிப்பு மற்றும் வட்டி விகித அபாயங்களையும் தணிக்கும். இந்தப் பண இருப்பு, திறைசேரி முறிகள் அல்லது குறுகிய காலப் முறிகள் போன்ற முதிர்வடையும் கடன் முறிகளைத் திருப்பிச் செலுத்த, புதிய கடன்களைப் பெறாமலும், அதிக வட்டி விகிதங்களில் கடனைப் புதுப்பிக்காமலும் விவேகத்துடன் பயன்படுத்தப்படும். கடன் சேவை கடமைகள் (பணப்புழக்க அபாயம்), வருமானம் அல்லது சந்தை அணுகலில் ஏற்படும் ஏற்ற இறக்கம் (அதிர்ச்சியைத் தாங்குதல்) மற்றும் அவசரகாலத் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பண இருப்பின் உகந்த அளவு தீர்மானிக்கப்படும். இதன் நோக்கம், அதிகப்படியான செயலற்ற நிதிகளைத் தவிர்த்து, குறுகிய காலக் கடமைகளை ஈடுசெய்யப் போதுமான பணத்தை வைத்திருப்பதாகும். வட்டி விகிதம் மற்றும் மறுநிதியளிப்பு அபாயங்களைத் தணிக்கும் வகையில், பண இருப்பின் பயன்பாட்டை ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் ஒழுங்குபடுத்துவதற்கும், ஒரு முறையான அணுகுமுறையை உறுதி செய்வதற்கும், தற்காலிக நடைமுறைகளைத் தவிர்ப்பதற்கும் தேவையான பரிந்துரைகளை PDMO சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கும்.

7.3 2027 – 2031 காலப் பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் நடைமுறைப்படுத்தல் திட்டம்

2027-2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் அரசிறை மற்றும் நாணயக் கொள்கை வகுப்பாளர்கள் உள்ளடங்களாக முக்கிய ஆர்வலர்களுடனான நெருங்கிய ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும். 2027 - 2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் முதல் ஆண்டுக்கான விரிவான நடைமுறைப்படுத்தல் திட்டமானது அரசாங்கத்தின் கடன் பெறுகை மூலோபாயத்திற்கமைய தொழிற்பாடு சார்ந்த கட்டமைப்பாக பணியாற்றுகின்ற 2027 இற்கான வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தில் விபரிக்கப்படும்.

2027 இற்கான வருடாந்த கடன்பெறுகை தொடர்பான விபரமான திட்டத்தை தயாரிக்கையில் 2027 -2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்துடன் அணிசேர்ந்திருப்பதை உறுதி செய்வதற்கும் தங்குதடையற்ற

நிறைவேற்றத்தினை வசதிப்படுத்துவதற்கும் நாணயக்கொள்கை வகுப்பாளர்களுடனும் அரசாங்கத்தின் காசு முகாமையாளர்களுடனும் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நெருக்கமாகப் பணியாற்றும். இவ் கூட்டுமுயர்ச்சி அணுகுமுறையானது ஒட்டுமொத்த அரசிறை மற்றும் நாணயக் கொள்கையுடன் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் ஒத்தியங்களை மேம்படுத்தி நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை பேணி வளர்க்கும்.

அதன் முன்னேற்றத்தினையும் செயல்திறனையும் மதிப்பிடுவதற்கு 2027 - 2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் பற்றிய காலாண்டு மீளாய்வுகளை நடாத்தும். இவ் மீளாய்வுகள் பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வெளிப்படைத் தன்மையான மேற்பார்வையையும் தேசிய படுகடன் முகாமைத்துவ குறிக்கோள்களுடன் அணிசேர்த்து முன்னெடுக்கப்படுவதையும் உறுதி செய்யும். திட்டமிடப்பட்ட மூலோபாயத்திலிருந்து விலகல்கள் அடையாளப்படுத்தப்படின் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் ஏதேனும் சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கு செயலூக்கம் மிக்க சீராக்க வழிமுறைகளை எடுத்து 2027 -2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் இலக்குகள் உரிய காலத்திலும் வினைத்திறன் மிக்க விதத்திலும் நிறைவு செய்யப்படுகின்றதை உறுதிசெய்யும்.

7.4 வரையறைகளும் சவால்களும்

2027 -2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் நடுத்தர காலத்தில் பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான வலுவான கட்டமைப்பொன்றினை வழங்குகின்ற அதேவேளை பல வரையறைகளும் சவால்களும் மூலோபாயத்தின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைதல் மற்றும் செயல்திறன் மிக்க நடைமுறைப்படுத்தல் இரண்டினையும் பாதிக்கலாம். 2027 -2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் முக்கிய வரையறைகளும் சவால்களும் பின்வருமாறு;

I. 2027 - 2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தைத் தயாரிக்கையில் படுகடன் கிடைக்கப்பெறும் தன்மை, உள்ளடக்கம் மற்றும் நம்பகத் தன்மை என்பன பயன்படுத்தப்பட்டன. 1985 இலிருந்து CSDRMS முறைமையிலிருந்து பொதுநலவாய மெரிடியன் படுகடன் முகாமைத்துவ முறைமைக்கு முறைமை மாறுகின்ற செயல்முறையில் இருப்பதாலும் படுகடன் தரவு மீள் இணக்கம் மற்றும் செல்லுபடி செயன்முறை இறுதிக்கட்டத்தில் இல்லாமையினாலும் மூலோபாயத்தை தயாரிப்பதற்காக படுகடன் தரவு ஒருங்கிணைப்பு MTDS 2027-2031 தயாரிப்பதற்கு படுகடன் தரவு ஒருங்கிணைப்பதற்கு இது சவாலாகவிருந்தது.

II. செலாவணி வீத தளம்பலும் வட்டி வீத ஏற்ற இறக்கங்களும் வெளிநாட்டு படுகடன் சொத்துப் பட்டியலுக்கு மேலதிக இடர்களை அறிமுகப்படுத்துகின்றன. இவற்றை முழுமையாக காப்பிடுவது அல்லது முன் கணிப்பது கடினமாக இருக்கலாம்.

III. 2027 -2031 காலப்பகுதிக்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தை தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் ஊகங்கள் காலப் போக்கில் மாறலாம். பொருளாதார வளர்ச்சி, பண வீக்கம், அரசிறைப் பற்றாக்குறைகள், வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் பற்றிய நிச்சயமின்மைகள் உண்மையான வெளிவரு

விளைவுகளுக்கு குறிப்பிடத் தக்களவு செல்வாக்கு செலுத்தக் கூடியன.

IV. உள்நாட்டு படுகடன் சந்தை உவப்பான மட்டத்திற்கு விருத்தியாகாமையினால் மட்டுப்படுத்தப்பட்ட முதலீட்டாளர் பண்முகப்படுத்தல் மற்றும் குறுகிய முதிர்ச்சிகள் என்பவற்றுடன் விரிவு குறைந்ததாக்க காணப்பட்ட விளைவு வீதலை நீடிப்பதற்கும் குறைந்த செலவில் மீட்சியடைகின்ற படுகடனுக்கு மீள்நிதியிடுவதற்குமான அரசாங்கத்தின் இயலுமையை மட்டுப்படுத்துகின்றது. சலுகை வளங்கள் மற்றும் சர்வதேச சந்தை நிலைமைகளுக்கான பெறுவழியினால் வெளிநாட்டு நிதியிடல் தெ ளிவுகள் செல்வாக்குசெலுத்துகின்றன. இவை கடன்பெறு தல் தெரிவுகளின் நெகிழ்வுத் தன்மையை ம ட்டுப்படுத்தலாம்.

8. முடிவுரை

2025 இறுதி மற்றும் 2026 இறுதிக்கு இடையிலான குறியீடுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில், இலங்கையின் பொது படுகடன் இடர் நிலவரத்தில் பெரும்பாலான குறியீடுகளின் அடிப்படையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, திறைசேரி உண்டியல்களின் பங்கு குறைதல், ஓராண்டுக்குள் மீள்நிதியளிப்புக்கு அல்லது வட்டி விகித மாற்றத்திற்கு உள்ளாகக்கூடிய கடனின் அளவு குறைதல், மொ.உ. உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் ஓராண்டுக்குள் முதிர்ச்சியடையக்கூடிய கடனின் அளவு குறைதல், மற்றும் வருவாயில் வட்டிச் செலுத்துதல்களின் பங்கு குறைதல் போன்றவை, குறுகிய கால மீள்நிதியளிப்பு இடர்களைக் கையாள்வதிலும், கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை மேம்படுத்துவதிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகின்றன..

இருப்பினும், அந்நியச் செலாவணி (FX) கடன் பங்கின் அதிகரிப்பு மற்றும் மொத்தக் கடன் தொகுப்பின் சராசரி முதிர்வு கால அளவில் (ATM) ஏற்பட்டுள்ள சிறிய குறைவு ஆகியவை, முக்கியமான பாதிப்புத்தன்மைகள் இன்னும் நீடிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. மேலும், 2025 ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இறுதி நிலையைச் சுட்டும் குறியீடுகள் மேம்பட்டிருந்தாலும், பெரும்பாலான குறியீடுகள் இன்னும் 2031 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடையவில்லை. இது, நடுத்தரக்கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தைத் தொடர்ந்து மற்றும் சீராகச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

MTDS 2027–2031 என்பது இலங்கையின் அரசாங்க படுகடனை நிர்வகிப்பதற்கான ஒரு விரிவான மற்றும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட அணுகுமுறையாகும். மீள்நிதியளிப்பு, வட்டி விகிதம் மற்றும் மாற்று விகித ஏற்ற இறக்கங்கள் போன்ற அபாயங்களைக் குறைப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம், கடன் வாங்கும் செலவைக் குறைப்பதோடு, நீண்டகால கடன் நிலைத்தன்மையை அடைவதை இந்த மூலோபாயம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மூலோபாயத்தின் முக்கிய அம்சம் யாதெனில், உள்நாட்டுச் சந்தையை மையமாகக் கொண்ட நிதியளிப்பிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிப்பதாகும்; இதனுடன், காலப்போக்கில் குறுகிய கால திறைசேரி உண்டியல்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

MTDS 2027-2031 ஆனது, குறுகிய காலக் கடனைக் குறைத்தல், கடன் முதிர்வு காலத்தை நீட்டித்தல் மற்றும் வருவாய்க்கும் வட்டிச் செலுத்துதலுக்குமான விகிதத்தைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கடன் நிலைத்தன்மையை மேம்படுத்த முயல்கிறது; இது நிதி நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பதோடு, கடன் மீள்கொடுப்பனவுச் சுமையையும் குறைக்கும்.

குறுகிய கால மீள்நிதியளிப்பு இடர்களைக் குறைப்பதில் அடைந்துள்ள

முன்னேற்றத்தை ஒருங்கிணைப்பதும், அதே நேரத்தில் ஒட்டுமொத்த முதிர்வுக் காலத்தை மேம்படுத்துவதும், நாணய மாற்று வெளிப்பாட்டைக் குறைப்பதும், கடன் செலுத்தும் திறனை வலுப்படுத்துவதும் முக்கிய கொள்கை முன்னுரிமையாக இருக்க வேண்டும். இந்த நோக்கங்களை அடைவதற்கு, விவேகமான கடன்பெறுகை முடிவுகள், பொருத்தமான வெளியீட்டுத் திட்டமிடல், திறமையான பொறுப்பு முகாமைத்துவம், மற்றும் கடன் தொகுப்பின் செலவு மற்றும் இடர் பண்புகளை உன்னிப்பாகக் கண்காணித்தல் ஆகியவற்றின் ஆதரவுடன், MTDS 2027-2031 இனைச் சீராகச் செயற்படுத்துவது அவசியமாகும்.

MTDS 2027-2031 ஆனது, இலங்கையின் அரசாங்க படுகடனை நிர்வகிப்பதற்கான ஒரு வலுவான கட்டமைப்பை வழங்குகிறது. இது உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வேளையில், நிதி நிலைத்தன்மையையும் மீள்தன்மையையும் பேண உதவுகிறது. MTDS 2027-2031 இனை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது, அரச கடன் தொகுப்பை விவேகத்துடன் நிர்வகிப்பதற்கும், இலங்கையின் கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

PDMO

பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் | இலங்கை

வருடாந்த கடன்பெறுகைத் திட்டம்

இலங்கையின் தனியொரு ஆண்டுக்கான நிதியிடல் மூலோபாயம்

2027

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு

செயலகம் (3 ஆம் மாடி)
கொழும்பு 00100
இலங்கை
info@pdmo.gov.lk

வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் 2027

உள்ளடக்கம்

1. அறிமுகம் 2
2. கடன்பெறுகைக்கான தேவைப்பாடு 3
3. கடன்பெறுகை உள்ளமைப்பு 5
4. முன்மொழியப்பட்ட கடன்பெறுகைக் கலப்பு 6
5. கண்காணித்தலும் அறிக்கையிடலும் 6
6. முடிவுரை 7

1. அறிமுகம்

வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தை வெளியிடுவதற்கான சட்டரீதியான தேவைப்பாடு

வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான சட்டரீதியான அடித்தளம், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி, வருடாந்த கடன்பெறுகைத் திட்டம், நடுத்தரகாலக் படுகடன் மூலோபாயத் திட்டத்துடன் (MTDS) ஒத்திசைந்ததாக வடிவமைக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 15 இன் பிரகாரம், இலங்கை அரசின் அந்தந்த நிதியாண்டுக்கான திரட்டிய கடன்பெறுகைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தைக் குறித்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்க வேண்டியது அவசியமாகும்.

எதிர்வரும் ஆண்டுக்கான வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தின் ஊடாக தெளிவான மற்றும் நடைமுறைப்படுத்தத்தக்க திட்டத்தைத் தயாரிப்பது, நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டத்தை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய தேவைப்பாடாகும். வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் என்பது அந்த நிதியாண்டுக்கான அரசின் ஒட்டுமொத்த நிதிசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட தனியொரு ஆண்டுக்கான நிதி மூலோபாயமாகச் செயற்படுகின்றது. படுகடன் முகாமையாளரின் முதன்மை நோக்கமாகிய முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டமொன்றுக்குட்பட்டு படுகடன் தீர்ப்பனவு குறித்த கடமைப்பாடுகள் உட்பட அரசின் நிதித் தேவைப்பாடுகள், தக்க நேரத்திலும் மிகக் குறைந்த செலவிலும் பூர்த்தி செய்யப்படுவதை

உறுதிப்படுத்துவதற்கு வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் அவருக்குத் துணைபுரிகின்றது. வருமானங்கள், செலவினங்கள் மற்றும் படுகடன் தீர்ப்பனவிற்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றின் முற்கூட்டிய கணிப்புகளை கருத்தில் கொண்டு, எதிர்வரும் நிதியாண்டுக்கான மொத்த நிதி தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிதிசார் மூலோபாயத்தை வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் எடுத்துரைக்கின்றது. இவ்வாறு, நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத் திட்டத்தினை முதலாவது ஆண்டில் நடைமுறைப்படுத்துவற்கான செயல்வலுவினை வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் ஏற்படுத்துகின்றது.

அரசாங்கத்தின் கடன்பெறுகை கட்டமைப்பின் அடிப்படை கூறாக வருடாந்தக் கடன்பெறுகைத் திட்டம் காணப்படுகின்றது. குறித்த நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்பெறுகைகளை நிர்வகிக்கும் அவற்றின் குறிக்கோள்கள், அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை இது எடுத்துரைக்கின்றது.

வருடாந்தக் கடன்பெறுகைத் திட்டம் - 2027, அரசாங்கத்தின் 2027-2031 காலத்திற்கான கடன்பெறுகை மூலோபயத்துடன் இணங்குதுடன் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அதேவேளை, கடன்பெறும் செலவுகளைக் குறைப்பதற்கும், அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் குறைப்பதையும் மையப்படுத்தி 2027-ஆம் ஆண்டிற்கான கடன்பெறுகைக் கலப்பினை முன்மொழிவகின்றது. 2027–2031 காலத்திற்கான நடுத்தர கால படுகடன் முகாமைத்தவ மூலோபயத்துடன் (MTDS 2027–2031) வருடாந்தக் கடன்பெறுகைத் திட்டம் - 2027, முழுமையாக அணிசேர்ந்துள்ளது.

பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்திற்கிணங்க, பயன்படுத்தவிருக்கும் முற்கூட்டிய சாதனங்கள், கடன்பெறுகை மூலங்கள், ஆண்டுக்கிடையிலான முதிர்ச்சிகள் உள்ளடங்கலாக வழங்கப்படவிருக்கும் திறைசேரி உண்டியல்களின் கடன்பெறுகை குறிகாட்டி காலவரையறை ஆகியவற்றைக் உள்ளடக்கிய விரிவான வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் வெளியிடப்படும்.

2. கடன்பெறுகைக்கான தேவைப்பாடு

வரி மற்றும் வரி அல்லாத வருவாய்கள், மானியங்கள் மற்றும் படுகடன் ஊடாக ஈடுகட்டப்படவுள்ள 2027 இல் அரசாங்கத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ. 9,930 பில்லியனாகும். வருவாய் மற்றும் மானியங்கள் ரூ. 6,230 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய கணக்கீட்டு சீராக்கங்களுடன் சேர்த்து ரூ. 3,800 பில்லியன் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது. இந்தப் பற்றாக்குறையானது, வெளிநாட்டுக் மற்றும் உள்நாட்டுக் கடன்பெறுகையாக முறையே ரூ. 730 பில்லியன் மற்றும் ரூ. 3,070 பில்லியன் ஊடாக நிதியளிக்கப்படும் (அட்டவணை 01).

அட்டவணை 01: மொத்த நிதியளிப்புத் தேவைகள் - 2027

		2027 இற்கான மதிப்பீடு ரூ. பில்லியன்
முதன்மைச் செலவினம்		5,070
மீண்டெழும் செலவினம்	3,320	
மூலதனச் செலவினம்	1,750	
அரசாங்கப் படுகடன் தீர்ப்பனவு		4,850
வட்டிக் கொடுப்பனவு	2,643	
படுகடன் மீள்செலுத்தல்*	2,207	
முற்பண கணக்குத் தொழிற்பாடுகளுக்கான ஏற்பாடு		10
மொத்தச் செலவினம்		9,930
மொத்த வருவாய்		6,230
ஏட்டுக்கான சீராக்கம் / அரசாங்கப் பிணையங்களுக்கான காசுப் பெறுமதி		100
கடன்பெறுகை வரையறை**		3,800
உள்நாட்டு நாணய நிதியளிப்பு	3,070	
வெளிநாட்டு நாணய நிதியளிப்பு	730	

* 2027 இன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் 2027 நிதியாண்டு காலப்பகுதியில் திரட்டப்பட்ட மொத்த குறுகிய கால கடன்பெறுகைக்கும் 2027 நிதியாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த குறுகியகால கடன்பெறுகை தீர்ப்பனவிற்கும் இடையிலான வேறுபாடு 2027 நிதியாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடன்பெறுகையினை கணிப்பிடும் நோக்கத்திற்காக குறுகிய கால கடன்பெறுகை அளவினை தீர்மானிப்பதில் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கமைய திறைசேரி உண்டியல்களின் மீட்புகள் படுகடன் மீள்கொடுப்பனவிற்கு வேண்டப்படும் தொகைக்காக உள்ளடக்கப்படவில்லை.

** 2027 இன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் 2027 ஆம் ஆண்டுக்கான கடன் பெறுகை வரையரை 2027 ஆம் ஆண்டினுள்; முதிர்ச்சியடையவுள்ள திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக ரூ.3,800 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் பிரகாரம் 2027 ஆம் ஆண்டினுள் முதிர்ச்சியடையவுள்ள திறைசேரி உண்டியல்களின் ரூ.2,300 பில்லியன் காணப்படுவதுடன் கடன்பெறுகை உள்ளமைப்பை தீர்மானிப்பதில் அது கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

ரூ. 640 பில்லியன் கொண்ட வெளிநாட்டு மொத்த கடன்பெறுகை ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்கள் மற்றும் பல்தரப்பு அத்துடன் இருதரப்பு கடன்வழங்கும் முகவராண்மைகளிடமிருந்து புதிய கடன்பெறுகைகள் மீதான எதிர்வுகூறப்பட்ட பகிர்ந்தளிப்புகளுடன் தொடர்புபடுகின்ற அதேவேளை ரூ.3,160 பில்லியன் கொண்ட உள்நாட்டு கடன்பெறுகை உள்நாட்டு சந்தையிலிருந்து திரட்டப்படவுள்ள புதிய படுகடனை தொடர்புபடுத்துகின்றது.

அட்டவணை 1 இன் பிரகாரம் 2027 இற்கான அரசாங்கத்தின் மொத்த கடன்பெறுகைத் தேவைப்பாடு ஆண்டுகாலப் பகுதியில் முதிர்ச்சியடைவதற்கு (ஆண்டுக்கிடையிலான முதிர்ச்சிகளின்றி) மதிப்பிடப்பட்ட திறைசேரி உண்டியல்களின் ரூ. 2300 பில்லியன் நீங்கலாக ரூ. 3800 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்களுக்கான மீள்நிதியிடல் உள்ளடங்கலாக (ஆண்டுக்கிடையிலான முதிர்ச்சிகளின்றி) மொத்த நிதியிடல் தேவைப்பாடு 2027 இற்கு ரூ. 6,100 பில்லியனாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

முக்கிய தொகைகள் ஒரே பார்வையில்

- 2027 ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் பிரகாரம் 2027 இற்காக ரூ.3,800 பில்லியன் கடன்பெறுகை தேவைப்பாடு (முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக)
- 2027 இனுள் ரூ.2,300 பில்லியன் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்.
- திறைசேரி உண்டியல் மீள்நிதியிடல் உள்ளடங்கலாக ரூ. 6,100 பில்லியன் மொத்த நிதியிடல் தேவைப்பாடு

3. கடன்பெறுகை உள்ளமைப்பு

நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2027-2031 இற்கமைவாக அரசாங்கமானது அதன் மொத்த கடன்பெறுகை தேவைப்பாட்டினை ரூபா பெயர்குறிக்கப்பட்ட படுகடன் சாதனங்க;டாக 88% உடன் சேர்ந்து வெளிநாட்டு செலாவணியில் பெயர்குறிக்கப்பட்ட படுகடன் சாதனங்களூடாக நிதியளிக்கப்படவுள்ள எஞ்சிய 12% உடன் நிறைவுசெய்வதற்கு திட்டமிடுகின்றது. அதற்கமைய ரூ. 730 பில்லியன் வெளிநாட்டுச் செலாவணியில் பெயர்குறிக்கப்பட்ட படுகடன் சாதனங்களுடாக நிதியளிக்கப்படவுள்ளது. இதில் ரூ. 90 பில்லியன் (ஏறத்தாள ஐ.அ.டொ 300 மில்லியன்) உள்நாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியில் பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகளை வழங்குவதன் வாயிலாக திரட்டப்படும்.

வரைபடம் 1: கடன்பெறுகை உள்ளமைப்பு - 2027 (**நாணயம் வாரியாக**)

வெளிநாட்டுச் செலாவணியில் பெயர்குறிக்கப் பட்ட நிதியிடல் **ரூ. 730 பில்லியன்**	+	ரூபா பெயர்குறிக்கப் பட்ட நிதியிடல் **ரூ. 5,370 பில்லியன்**	=	கூட்டு மொத்த நிதியிடல் தேவைப்பாடு ரூ.6,100 பில்லியன்

வரைபடம் 2: கடன்பெறுகை உள்ளமைப்பு - 2027 (**வதிவிட வாரியாக**)

வெளிநாட்டு நிதியிடல் **ரூ. 640 பில்லியன்**	+	உள்நாட்டு நிதியிடல் **ரூ. 5,460 பில்லியன்**	=	கூட்டு மொத்த நிதியிடல் தேவைப்பாடு **ரூ.6,100 பில்லியன்**

வெளிநாட்டு நிதியிடல்

2027 இல் வெளிநாட்டு மூலங்களாக ரூ. 640 பில்லியன் நிதியிடல் தற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது. இதில் கொள்கை அடிப்படையிலான நிதியிடலுகான ரூ.210 பில்லியன் மற்றும் கருத்திட்ட நிதியிடலுக்காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு மூலங்களிலிருந்து ரூ. 315 பில்லியன் உள்ளடங்கலாக வெளிநாட்டு பல்தரப்பு மற்றும் இருதரப்பு கடன்வழங்கல் முகவராண்மை களிடமிருந்து ரூ. 640 பில்லியன் கிடைக்கபெறுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ரூ. 115 பில்லியன் மேலதிக தொகை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து விரிவாக்கப்பட்ட நிதிவசதியின் 8 ஆம் தொகுதியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டு நிதியிடல்

2027 இல் ஏறத்தாழ ரூ.5,460 பில்லியன் தொகையுடைய (ஆண்டுக்கிடையிலான திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளின்றி) மொத்த நிதியிடல் தேவைப்பாட்டின் ஏறத்தாள 90% உள்நாட்டு சந்தை ஊடாகத் திரட்டப்படுவதற்கு எதிர்வுகூறப்பட்டுள்ளது. பொது ஏலங்கள் ஊடாக அரசாங்க பிணையங்களை வழங்குவதனூடாக இந்நிதியிடல் பெற்றுக் கொள்ளப்படும். திறைசேரி முறிகள் முதன்மையாக ஆண்டுக்கான நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டு படுகடன் சாதனமாக செயற்படும். 3 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான வீச்சிற்கான முதிர்ச்சிகளுடன் கூடிய உள்நாட்டு சந்தையில் ரூபா பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலம் ரூ.3,570 பில்லியன் திரட்டுகின்ற அதேவேளை திறைசேரி உண்டியல்களின் நிலுவையாக இருக்கின்ற தொகையினை ரூ. 500 பில்லியனால் குறைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்கின்றது. மூன்று ஆண்டுகள் வரையான முதிர்ச்சிகளுடன் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியில் பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் ரூ.90 பில்லியன் வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிடுகின்றது. ரூ.1800 பில்லியன் தொகையுடைய திறைசேரி உண்டியல்கள் ஒரு ஆண்டு வரையிலான மீட்சிகளுடன் கூடிய குறுகிய கால

சாதனங்களாக செயற்படும். உள்நாட்டுச் சந்தையில் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் முதிர்ச்சிகளுடன் கூடிய திறைசேரி உண்டியல்களை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது.


2027 ஆம் ஆண்டுக்கான ஏல அட்டவணை பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தால் ஒவ்வொரு நீடிக்கின்ற மூன்று மாதங்களுக்கான இற்றைப்படுத்தலுடன் ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும். திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஆகியவற்றை உள்ளடக்கி வெளியிடப்படும் வருடாந்த கடன்பெறுகைத் திட்டம் 2027 ஆம் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சலை முற்கூட்டியே கணிப்புச் செய்து அதன் அடிப்படையில் அமைந்திருக்கும்.

4. முன்மொழியப்பட்ட கடன்பெறுகைக் கலப்பு

அட்டவணை 02: **முன்மொழியப்பட்ட கடன்பெறுகைக் கலப்பு** - 2027

மூலம்	தொகை (ரூ. பில்)	சதவீதம்
இருதரப்பு	160	2.6
பல்தரப்பு	480	7.9
திறைசேரி உண்டியல்கள்	1,800	29.5
ரூ. பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகள்	3,570	58.5
வெளிநாட்டு செலாவணி பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகள்	90	1.5
மொத்தம்	6,100	100

வரைபடம் 03: **முன்மொழியப்பட்ட கடன்பெறுகைக் கலப்பு** - 2027



ரூ. பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகள்	58.5%
திறைசேரி உண்டியல்கள்	29.5%
பல்தரப்பு	7.9%
இருதரப்பு	2.6%
வெளிநாட்டு செலாவணி பெயர்குறிக்கப்பட்ட திறைசேரி முறிகள்	1.5%

உள்நாட்டு கடன்பெறுகைகள்- ரூ. 5,460 பில்லியன்	
திறைசேரி உண்டியல்கள்	33.0%
திறைசேரி முறிகள்	65.4%
உள்நாட்டு டொலர் முறிகள்	1.6%

வெளிவநாட்டு கடன்பெறுகைகள் - ரூ. 640 பில்லியன்	
பல்தரப்பு	75%
இருதரப்பு	25%

5. கண்காணித்தலும் அறிக்கையிடலும்

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம், இலக்குகளை அடைவதை உறுதிசெய்வதற்கும், தேவையான திருத்தங்களைச் செய்யவும் காலாண்டு மீளாய்வுகளுடன் முழுவதும் வருடாந்த கடன்பெறுகைத் திட்டத்தின் 2027 இன் நிறைவேற்றுதலை கண்காணிக்கும்.

6. முடிவுரை

2027 வருடாந்த கடன்பெறுகைத் திட்டமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் ஊடாக உள்நாட்டு நிதியிடல்கள் மீது கவனம்செலுத்தியும் சர்வதேச நிதியியல் நிறுவனங்களிடமிருந்து வெளிநாட்டு நிதியிடல் மீது கவனம்செலுத்தியும் அரசாங்கத்தின் நிதியிடற் தேவைகளை பூர்த்தி செய்யும் முறையான மூலோபாயத்தை வகிக்கின்ற அதேசமயம் படுகடன் நிலைபேற்றுத் தன்மையையும் உறுதிசெய்கிறது. இத்திட்டம் 2027 – 2031 நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தில் குறிப்பிட்ட செலவகளையும் இடர்நேர்வு இலக்குகளையும் அடைவதை நோக்காக் கொள்கின்றது. முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டத்துடன் ஆகக் குறைந்த சாத்தியமான செலவுடன் கடன்பெறுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களில் இலருந்து நிதியிடலைப் பன்முகப்படுத்தவதற்கும் அரசிறை உறுதிப்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்தவம் என்பவற்றுக்கு துணையளிப்தற்கும் திட்டமிடுகின்றது.